சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

71. திருமணப் பத்திரிகை

“ தந்தையாகிய தாங்கள் இருக்கும்போது அந்தத் தசரத சக்ரவர்த்தியையும் அழைக்க வேண்டியதுதானா? அழைப்புப் பத்திரிகையும் தயார் செய்ய வேண்டியதுதானா? இதுதான் தங்கள் விருப்பமோ? அல்லது, இன்றே விரைவாக மணத்தை முடித்துக் கொண்டு செய்தி தெரிவித்தால் போதும் என்பதுதான் தங்கள் இஷ்டமா?” என்று சாமர்த்தியமாகக் கேட்ட ஜனகனை நோக்கி அமைதியாகப் புன்னகை புரிந்திருக்க வேண்டும் விசுவாமித்திரன்.

* * * *

பிறகு, முனிவன் பேசுவதையும், அவசர அவசரமாகத் திருமணப் பத்திரிகையும் தூதரும் போவதையும் இதோ பாருங்கள் :

மல்வலான் அவ்வுரை
பகர, மாதவன்
“ ஒல்லையில் அவனும்வந்(து)
உறுதல் நன்” றென, —
எல்லையில் உவகையான்,
“ இசைந்த வாறெலாம்
சொல்லு” கென்(று) ஓலையும்
தூதும் போக்கினான்.

[மல்வலான் - மல்யுத்தத்திலே வல்லவனான ஜனகன். பகர-சொல்ல. மாதவன் - மஹா தபஸ்வியான விசுவாமித்திரன். ஒல்லையில்-விரைவாகவே. வந்துறுதல் - வந்து சேர்தல். எல்லையில் - எல்லையில்லாத. இசைந்த வாறெலாம் - பொருத்தமாக நடந்த விவரங்களை யெல்லாம். சொல்லுகென்று - சொல்லுக என்று.]

“ காலோட்டாமல் ‘ சுபஸ்ய சீக்ரம் ’ என்று இந்தச் சுப காரியத்தைச் செய்ய வேண்டியது தான் ; என்றாலும் விரைவாகத் தசரதனும் வந்து சேருவது நல்லதுதான்! ” என்று விசுவாமித்திரன் சொன்னதும், ஜனகனும் உடன்படுகிறான். எல்லையில்லாத குதூகலத்துடன், தூதர்களை நோக்கி, “ நீங்கள் போய் நடந்ததை யெல்லாம் சொல்லுங்கள் அந்தச் சக்ரவர்த்திக்கு ” என்று கட்டளையிட்டுத் திருமண ஓலையும் கொடுத்து அவர்களை அனுப்பிவைக்கிறான்.

இந்தத் தூதர்களும் எவ்வளவு அவசரமாகப் போய்விட்டார்கள்! தசர சக்ரவர்த்தியின் அரண்மனை வாசலுக்கே போய்விட்டார்கள். போய்க் கூ ட்டத்தோடு கூட்டமாய் நெருங்கிவிட்டார்கள். நெருக்கித் தள்ளிக்கொண் உள்ளே புக முயற்சி செய்வதையும் இதோ பார்க்கிறோம்:

கடுகிய தூதரும்
காலிற் காலிற்சென்(று)
இடிகுரல் முரசதிர்
அயோத்தி எய்தினர்;
256 அடியிணை தொழஇடம்
இன்றி மன்னர்கள்
முடியொடு முடிபொரு
வாயில் முன்னினர்.

[கடுகிய — வேகமாய்ச் சென்ற. காலில் காலில் சென்று — கா களால் ஓடிக் காற்றைப் போல விரைந்துபோய். முரசுஅதிர் — முரசுக அதிர்கின்ற. பொரு — மோதுகிற. முன்னினர் — முற்பட்டு அடை தார்கள்.]

ஜனகனின் தூதர்கள் எவ்வளவு வேகமாய்ப் போய், எவ்வளவு வே மாய்ச் செய்தி சொல்ல முயன்றார்கள்!— என்பதைக் கவியும் படுவேகமா ஒரே பாட்டில் காட்டியிருக்கிறான்.

நடந்துதான் போனார்களா? காற்றைப்போலப் பறந்து போனார்களா — இடி இடிப்பது போல முரசுகள் முழங்குவது கேட்டு, 'அயோத்திம நகரம் வந்துவிட்டதாக அறிந்து கொண்டா கள். அந்தக் குரலில் அந்த முரசுக அயோத்தி மன்னனின் பெருமையைத்தா அப்படிப் பேசுகின்றன என்று தெரிந் கொண்டார்கள்.



அரண்மனை வாசலிலே கிரீடத்தோ கிரீடம் மோதித் தாக்கி உரசிக் கொண் டிருக்கிறது, உள்ளே போக இடம் பெறமல் அந்த அரசர்களையும் வெட்டித் தள்ளி கொண்டு முற்பட்டு உள்ளே போய் விட்டா களாம் ஜனக தூதர்கள்.

* * *

சக்கரவர்த்தியின் அனுமதி பெற்றுத்தா இவ்வளவு அவசரமாக உள்ளே போக முடி தது. இவர்கள் இப்படி உட்புகுந்து என்ன செய்கிறார்கள், பார்க்கலாம்:

முகந்தனர் திரு அருள்,
முறையின் எய்தினர்,
திகழ்ந்தொளிர் கழல்இணை
257 தொழுது, செல்வனைப்
புகழ்ந்தனர், "அரச! நின்
புதல்வர் போயபின்
நிகழ்ந்ததை, இது" என
நெடிது கூறினர்.

[மூகர்தனர் திரு அருள் — ஆரம்பவும் சக்ரவர்த்தியின் தயவைப் பெற்றவர்களாய். முறையின் — முறைப்படியே. திகழ்ந்து ஒளிர் — மிகவும் விளங்குகிற. கழல் இணை — இரண்டு பாதங்கள். செல்வனே — (இங்கே) ஸ்ரீமானான சக்ரவர்த்தியை. அரச — அரசே. போயபின் — போன பின்பு. என — என்று. நெடிது — விஸ்தாரமாக.]

சக்[redacted]ர்த்தியிடம் போக வேண்டிய முறைப்படி மரியாதையாகப் போய்த் திருவடிகளில் வணங்கினார்கள். அந்த மாட்சியை முறைப்படியே புகழ்ந்தார்கள். பிறகு செய்தி சொன்னார்கள். ராம லக்ஷமணர் தசரதனைப் பிரிந்து போன பின்பு நடந்ததில் விசேஷமானதைச் சொல்லி, வில்லை முறித்த செய்தியை விஸ்தாரமாகச் சொன்னார்கள்.

* * * *

அப்பால் தூதர்கள் திருமண ஓலையைக் கொடுக்கிறார்கள். அதை அரசன் எப்படி வாங்கிக் கொள்ளுகிறான்? ராஜ சபையின் மரியாதைக் கிரமங்களை இங்கும் பார்க்கிறோம்:

கூறிய தூதரும்
 கொணர்ந்த ஓலையை,
"ஈறில்வண் புகழினாய்!
 இது அ(து)'' என்றனர்;
வேறொரு புலமகன்
 விரும்பி வாங்கினன்;
மாறதிர் கழலினன்
 'வாசி' என்றனன்.

[ஈறில் வண் புகழ் — முடிவில்லாமல் புகழ்ந்துகொண்டேயிருக்கக் கூடிய செழிப்பான குண விசேஷங்களும், செயல் திறமையும். அது — அந்த ஜனகன் கொடுத்த திருமண ஓலை. புலமகன் — அறிஞன். மாறு அதிர் — ஒன்றுக்கொன்று மாறாக ஒலிக்கின்ற. கழலினன் - வீரக் கழல் அணிந்த சக்ரவர்த்தி.]



தூதர்கள் திருமண ஓலையை ராஜ சன்னிதியில் நீட்டியதும், சக்ரவர்த்தி குனிந்து வாங்குவது சம்பிரதாயமில்லை. எனவே வேறொரு அறி

கஸதன் — வாங்கிக் கொள்ளுகிறான். இவனைச் சக்ரவர்த்தியின் 'வாசகன்' என்று சொல்லலாம். இந்த வாசகன், வாக்கியதும் வாசித்துவிடவில்லையா… சக்ரவர்த்தி 'வாசி' என்று கட்டளையிட்ட பின்பே, வாசித்துக் காட்டுகிறா…

வில் முறித்த வெற்றியை ஒரு கலைச் சிகரமாகச் சித்திரித்துக் காட்… விட்டு, சீதை தன் விரகதாபத்தினிடையே அந்த வெற்றிச் செய்தியை… தன் உயிர்த்தோழி மூலமாய்க் கேள்விப்படுவதாய்க் காட்டுவதே ஓர் அதிச… மான கம்ப சித்திரம். வசிஷ்ட குரு குலத்திலே அடைந்த வில்வி… கல்வியால் வில்லை முறிக்கிறான் ராமன் வால்மீகி ராமாயணத்திலே. இந்… கதைதான் கம்ப சித்திரத்திலே எவ்வளவு அதிசயமாக மாறி விட்டது… இங்கே காதலன் காதலியை அடைவதற்கு இடையூறாகத் தோன்றுகிறது… வில் ஆரம்ப தசையிலே. இதனால்தான் ராமன் வில்லை நோக்கி ஜொலித்… எழுந்ததும், "அழிந்தது வில்!" என்று தேவர்கள் ஆரவாரம் செய்கிறா… கள். இடையூறு அழிந்தது சீதா ராமர்களின் காதல் மணத்துக்கு — என்… பது குறிப்பு. ஆனால் ராமனை இப்பேர்ப்பட்ட வீரனாகத்தானா காட்டுகிறான்… கவிஞன்? அதிவீரனாகக் காட்டுவதால், இடையூறே வெற்றிக்கு ஒருபடி… யாவதாகவும் காட்டுகிறான். ஆம், ஒரு மலைபோன்ற இடையூறாகத் தோன்… றிய அந்த வில்லைக் காதலிக்குச் சூட்டும் ஒரு மணமாலை போலத் தூக்கி விடு… கிறான் அல்லவா காதலன்?

இப்படி யெல்லாம் அந்தக் காட்சியைக் காட்டி, அந்த அநாயாஸ வெற்… றியைத் தோழி மூலமாகச் சீதைக்கும் காட்டிய பின், ஜனகனுடைய ஆத்… திரத்தையும் ஹிருதயத் துடிப்பையும், விசுவாமித்திரனுடைய அமைதியான… பதிலையும், பிறகு தூதர்கள் மணவோலை கொண்டு அதிவேகமாகப் போய்த்… தசரதனது அரண்மனை வாசலிலே சிற்றரசர்களோடு நெருக்குண்டு தவிப்ப… தையும், பிறகு அனுமதி பெற்று உள்ளே போய்த் திருமணப் பத்திரிகை… கொடுப்பதையும் கூட இவ்வளவு ரஸமாகச் சொல்ல முடியுமென்று யார்… தான் எதிர்பார்த்திருக்க முடியும்?

ராஜ சபையின் பல பல சம்பிர… தாயங்களுக்கிடையே நம்மையும் எப்… படியோ அழைத்துப் போய், திரு… மணப் பத்திரிகையை ஒரு வாசகனை… வாங்கி வாசிக்கச் சொல்லும் சக்கர… வர்த்தியை எவ்வளவு பிரத்யட்சமாக… நமக்குக் காட்டி விடுகிறான் கவிஞன்!

வில் முறித்த விவரம் கேட்ட அள… விலே உள்ளமும் தோளும் ஒருங்கே… பூரித்து ராஜ சம்பிரதாயங்களை… யெல்லாம் மறந்து, ஒவ்வொருவரோ… டும் அந்தச் சந்தோஷ சமாசாரத்… தைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படு… கிறது சக்கரவர்த்தியின் உள்ளம். அத்தகைய செய்தி கொணர்ந்த… தூதர்களுக்கு இடைவிடாது பரிசு… களை வழங்க வேண்டுமென்றும் அந்… உள்ளம் எவ்வளவு ஆவலோடு துடித்… துக் கொண்டிருக்கிறது!

பி. ஸ்ரீ.

23

72. மகிழ்ச்சி பட்ட பாடு

வாசகன் ஓலையை வாசித்ததும் சக்ரவர்த்திக்கு அப்படி ஏன் தோள் பருத்து வளர்கிறது? அந்தத் தோள்வளைகள் அப்படியே விரிந்து கிமிர்ந்து தெறித்துப் போகுமோ?—என்று கூடத் தோன்றுகிறது. ஆம், தன் மூத்த குமாரனுடைய வில்-தொழிலை, வீரச் செயலை, அந்த மகாராஜா அவ்வளவு பிரமாதமாய்ப் புகழ்ந்து எழுதி விட்டான் :

இலைமுகப் படத்(து),அவன்
எழுதிக் காட்டிய
தலைமகன் சிலைத்தொழில்
செவியில் சார்தலும்,
நிலைமுக வலயங்கள் 259
நிமிர்ந்து நீங்கிட,
மலையென வளர்ந்தன
வயிரத் தோள்களே !

181

[இலை—(இங்கே) பனை ஓலை. இலைமுகம்—பெரிய ஓலையின் இடம். படத்து — படத்தில். தலைமகன் — மூத்த மகனான ராமன். சிலை — வில். நிலைமுகம் — நிலையான இடம். வலயம் — வளை.]

பனை ஓலையில் எழுதிய திருமுகம்தான். ஆனால் படத்திலே சித்திரித்துக் காட்டியது போல் இருந்தது அந்த வில்வித்தையின் அபாரமான திறமையை. ஜனக மன்னனே எதிர் வந்து முகங் காட்டி அப்படித் தன் கண்முன் சித்திரிப்பது போல் இருந்தது தசரத சக்ரவர்த்திக்கு. அப்படியானால், தோள் ஏன் அப்படி நிமிர்ந்து வயிர மலைபோல் வளர்ந்து விடாது? தோள்வளை தான் நிற்க முடியுமா அந்தத் தோள்களில்?

* * * *

“ஓஹோ! அன்று ஏதோ இடி இடித்ததென்று நினைத்தோமே, அதுதானோ?” என்று அதிசயமாய்ப் பேசுகிறான் தசரதன். ராமன் வில்லை முறித்த அந்த காலை ஒட்டி அயோத்தியில் ஓர் இடிமுழக்கம் கேட்டதாம். அது இப்போது நினைவிற்கு வந்ததும், “அன்றைய தினம் இங்கே கேட்டதே; அது இடி யில்லை. அந்த வில்லை முறிந்த பேரோசைதானோ?” என்ற மயக்கம்தான் தசரதனுக்கு.

வெற்றிவேல் மன்ன
வ
"தக்கன் வேள்வி
கற்றைவார் சடைமு
கணிச்சி வானவன்
முற்றஎழ் உலகையு
வென்ற மூரிவில்
இற்றபேரொலிகொ
இடித்த(து)
ஈங்(கு)?'' என்று



[வெற்றிவேல் மன்னவன் — (இங்கே) தசரத சக்ரவர்த்தி. தக்கன் — தக்ஷன். வேள்வி — யாகம். கற்றை — தொகுதி. வார் — நீண்ட. கணிச்சி — மழு என்ற ஆயுதம். வானவன் — கடவுளாகிய சிவ பெருமான். முற்ற — முழுதும். மூரி — வலிமை. இற்ற — முறிந்த. பேரொலி — பேரோசை. ஈங்கு — இங்கு.]

என்ன மயக்கம்! என்ன உத்ஸாகம்! என்ன ஹாஸ்ய உணர்ச்சி! இப்படி உல்லாஸமாகவும் வேடிக்கையாகவும் தசரதன் கொஞ்சநேரம் இடைவிடாமலே பேசிக் கொண்டிருக்கிறான், வசிஷ்டர் முதலானவர்களோடு.

* * *

பிறகு பெருமகிழ்ச்சியோடு தூதர்களுக்குப் பரிசு கொடுத்தான்:

என்றுரைத்(து) எதிர்எதிர்
இடைவி டாது, நேர்
துன்றிய கனைகழல்-
தூதர் கொள்கெனப்
பொன்திணி கலன்களும் 261
தூசும் போக்கினன்,
குன்றென உயரிய 24
குவவுத் தோளினன்.

[துன்றிய — ஒத்த. கனை — ஒலிக்கின்ற. கழல்—வீரர்கள் காலில் அணிந்து கொள்ளும் வீரக் கழலாகிய அணி. கொள்கென — கொள்க என்று. பொன்திணி — பொன்னால் செய்யப்பட்ட. கலன் — அணிகலம், ஆபரணம். தூசு — ஆடை. உயரிய — உயர்ந்த. குவவு — திரண்ட.]

சம்பிரதாயங்களை யெல்லாம் மறந்து சக்ரவர்த்தி சபையிலிருந்தவர்களுக்கு எதிர் எதிரே போய் மளமளவென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தபின், 'ஜனக தூதர்களுக்கு விடை கொடுக்கவில்லையே!' என்ற ஞாபகம் வந்தது. வந்ததும், "தூதர்களே! இதோ வாங்கிக் கொள்ளுங்கள்' என்று ஆடையாபரணங்களை வாரி வாரி வழங்கினன். சம்பிரதாயப்படி பிறரைக் கொண்டு கொடுப்பிக்கவில்லை; தானே ஆசை தீர அள்ளி அள்ளிக் கொடுத்தான்.

* * * *

அந்தப் பரிசு-மழைக்கிடையே தூதர்கள் விடைபெற்றதும், "ராமன் இருக்கிற மிதிலைக்குச் சேனையும் சிற்றரசர்களும் முந்திப் புறப்பட வேண்டும்" என்று பறை சாற்றிக் கட்டளையிடுகிறான் சக்ரவர்த்தி:

"வானவன் குலத்(து) எமர்
வரத்தி னல்வரும்
வேனில்வேள் இருந்தஅம்
மிதிலை நோக்கி,நம் 262
சேனையும் அரசரும்
செல்க முந்தென,
ஆனைமேல் அணிமுர(சு)
அறைகெ 'ன்(று) ஏவினன்.

182

[வானவன் — (இங்கே) வானத்திலுள்ள சூரியன். வானவன் குலம் — சூரிய குலம். எமர் — எமது முன்னோர். வேனில்வேள் — மன்மதன்; (இங்கே) மன்மத சொரூபனாகிய ராமன். முந்து — முன்னதாக. என — என்று. அணிமுரசு — அழகிய முரசு. அறைக - அறையட்டும்.]

யானைமேல் முரசு ஏற்றி அடித்துக் கொண்டே போய்ச் செய்தி தெரிவிப்பது அக்கால விளம்பர சம்பிரதாயம். அந்த வழக்கப்படி, சக்ரவர்த்தியின் ஆணைக்கு இணங்க ராஜசேவகன் பறை யறைந்து செய்தி தெரிவித்தான்.

• • •

முரசின் இடி காதில் விழுந்ததுதான் தாமதம், படை வீரர்களும் அரசர்களும், ஆண்களும் பெண்களும் எவ்வளவு சந்தோஷமடைந்தார்கள், தெரியுமா?

சாற்றிய முரசொலி
செவியில் சாருமுன்,
கோல்-தொடி மகளிரும்
கோல மைந்தரும்,
வேல்தரு குமரரும்
வென்றி வேந்தரும்,
காற்(று)எறி கடல்எனக்
களிப்பின் ஓங்கினர்.

[சாற்றிய — அறைந்த. கோல்தொடி — அழகிய தொடி என்னு
வளை. மகளிர் — பெண்கள். கோல மைந்தர் — அழகிய ஆடவர்க
வேல்தரு குமார் — வேலாயுதம் ஏந்திய யுவர்களான போர்வீரர்க
வென்றி — வெற்றி. காற்று எறி — புயல் காற்றினால் மோதப்படுகிற.
புயல்காற்று மோதி அடிக்கும்போது கடல் என்ன பாடு படுமோ
அந்தப் பாடு பட்டதாம் சேனா சமுத்திரம். போர்வீரர்களின் மனைவியு
ஆடவர்களோடு சரிசமானமாக, கள்வெறி போன்ற அந்தக் களிப்பை
பருகி விட்டார்களாம். அரசர்களைப் போல் சாதாரணப் படை வீரர்களு
களிப்பிலே பங்கு கொண்டு ஓங்கி உயர்ந்து போனார்களாம், — ராமனுடை
வீரச் செயலைக் கேட்டதும், — அவனுக்குக் கல்யாணம் நடக்கப் போ
றது என்று தெரிந்ததும்.

* * * *

திருமண யாத்திரைக்குமுன் சக்ரவர்த்தியின் மகிழ்ச்சியையும் அ
னைச் சேர்ந்தவர்களின் மகிழ்ச்சியையும் வெளியிடும் கட்டம் இது. க
னுடைய உணர்ச்சிச் சித்திரங்களைச் சாதாரண கவிதையை அளக்கும் அ
கோலைக் கொண்டு அளக்க முயல்வது பாலின் சுவையை ஆழாக்கை
உழக்கையும் கொண்டு அளந்து பார்ப்பது போலத்தான்! கண்டு தொ
அறிந்து அனுபவித்த பொருள்களை உள்ளபடி சொல்வது மட்டும் கம்பனை
போன்ற மகா கவியின் தர்ம மன்று. மனோபாவத்தால் அப் பொருள்களை
கண்டு தொட்டு அனுபவித்து அழகு செய்து மகா கவி காட்டும்போ
சாதாரணப் பொருள்களும் உணர்ச்சிகளும் அசாதாரண அழகு கா
நம் உள்ளத்தைத் தொடுகின்றன, வசீகரிக்கின்றன. சாதாரணப் பொரு
களை அசாதாரணமாகக் காட்டுவதும், அசாதாரணத்தையும் சாதா
மாக்கி விடுவதும் கவிஞன் செய்து காட்டும் மந்திர வித்தை — இந்
ஜாலம். இது கல்வித் திறமன்று, உயர்ந்த கவித்திறம். இத்தன
திறமையை இந்தச் சாதாரண கட்டத்திலும் பார்க்கிறோம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

73. படைவீரர் பிரயாணம்

எவ்வளவு கோஷமாய்க் குதூகலமாய்ப் போகிறது சக்கரவர்த்தியின் சேனை மிதிலா பட்டணம் நோக்கி, — தன் இடத்தை விட்டுப் பெயர்ந்து பொங்கி யெழுந்த சமுத்திரம் போலே. இடையிடையே விரிந்து ஓங்கிய குடைகள், பரந்து பறக்கும் கொடிகள், பேரிகைகளின் இடிகள். பக்கத்திலுள்ள மரங்களை இடையிடையே முறித்தும் சாய்த்தும் அவற்றின்மீது உரசியும் செல்லும் யானைகள். "நிலத்தை மிதிக்கவில்லையோ?" என்று வியக்கும்படி பாய்ந்து செல்லும் குதிரைகள்.

அந்தப் போர்வீரர்களுடன் மனைவியரும் செல்லுகிறார்கள். இப்பெண்களும் குதிரையிலும் யானையிலும் பல்லக்கிலும் போகிறார்கள். இந்த வசீகரமான தோற்றத்தைக் கவிஞன் இவர்களுடைய காதலர்களின் கண்களைக் கொண்டே பார்க்கிறான் :

முத்தினால் முழுநில(வு)
    எறிக்கும், மொய்ம்மணிப்
பத்தியால் இளவெயில்
    பரப்பும், பாகினும்
தித்தியா நின்றசொல்—
    சிவந்த வாய்ச்சியர்
உத்தரா சங்கமிட்(டு)
    ஒளிக்கும் கூற்றமே!

[எறிக்கும் — வீசும். மொய்ம்மணி — நெருக்கமாய்ப் பதித்த ரத்தினங்கள். பத்தி — தொகுதி. பாகினும் — சர்க்கரைப் பாகைக் காட்டிலும். தித்தியா நின்ற — தித்திப்பு மிகுந்த. உத்தராசங்கம் — மேலாடை. கூற்றம் — யமன்.]

முத்து மாலைகளும் இரத்தின மாலைகளும் அணிந்திருக்கிறார்கள். போகும்போதே அம் முத்து மாலைகள் சந்திரிகை வீச, இரத்தினமாலைகள் இளவெயில் வீசுகின்றனவாம். இப்படி மார்பை மறைத்திருக்கும் மேலாடை மீது, வெயிலும் நிலவும் ஒருங்கே வீசும்படி ஆபரணங்களை அணிந்து கொண்டு பேசிக்கொண்டே போகிறார்களாம்.

அந்தப் பேச்சைத்தான், "வெல்லப் பாகைக் காட்டிலும் தித்திக்கும் சொல்" என்கிறான். அந்தச் சிவந்த வாயிலிருந்து புறப்படும் சொல் அப்படித் தித்திக்க, திருட்டுத் தனமாக யமனையே மறைத்துக்கொண்டுபோவது

போலப் போகும் அந்தத் தோற்றத்தை எப்படி வர்ணிப்பது ? *"கொன்றி டும் என இனிதாய்..." என்றெலாம் தானே அந்த இனிமையை—அந்த கொடுமையைப் பேச முடியும்?

பல்லக்குகளில் கூட்டக் கூட்டமாய்ப் போகும் பெண்களைத் தான் பாருங்கள். மேகத்திலே புது மலர்கள் பூத்திருப்பதுபோலப் பூவும் கூந்தலு மாய்ப் போகிறார்களாம். அந்த முகங்களைப் பார்த்துவிட்டாலோ, "எத் தனை சந்திர பிம்பங்கள் உதயமாகி, விமானங்களில் போகின்றன !" என்று வியந்து சாமானியர்களும் கவிஞர்களாகப் பார்க்கிறார்கள்.

இனி, பெண்களின் பக்கத்திலே செல்லும் ஆடவர்களையும் பார்க்க லாமே :

265
வில்லினர், வாளினர்,
வெறித்த குஞ்சியர்,
கல்லினைப் பழித்(து)உயர்
கனகத் தோளினர்,
வல்லியின் மருங்கினர்
மருங்கு, மாப்பிடி
புல்லிய களிறென,
மைந்தர் போயினர்.

[வெறித்த — (பூக்களை நிறைய அணிந்திருப்பதால்) பூமணம் அதிக மாக வீசுகிற. குஞ்சியர் — சிகையை உடையவர்கள். கனகத் தோள் — பொன்மயமாகச் சிவந்த தோள். வல்லி — கொடி. மருங்கினர்—இடையை உடையவர்கள். மருங்கு — பக்கத்திலே. மாப்பிடி — பெருமைபெற்ற பெண் யானை. புல்லிய — தழுவிச் செல்லும் ; நெருங்கிச் செல்லும். களிறு — ஆண் யானை. மைந்தர் — ஆடவர்.]

ஆயுதபாணிகளாய்ப் போகிறார்கள். கம்மென்று நறுமணம் வீசும் காட்டுப் பூக்களைப் பறித்து நிறையச் சூட்டிக்கொண்டு போகிறார்கள். வீரத் தோள் குலுங்கப் போகிறார்கள். பெருமை பிடித்த பெண் யானை போலச் சென்றுகொண்டிருக்கும் தங்கள் மனைவியர் பக்கத்திலே அந்த ஆண் பிள்ளைகள் அதோ நெருங்கிச் செல்லுகிறார்கள் — என்று காட்டு கிறான் கவிஞன்.

அந்தப் பெண்கள் அப்படிச் செருக்குடன், காதலர்கள் தங்களை நெருங்கி வரும்படி சென்றுகொண்டிருக்க, வேறு சில பெண்கள் வேறொரு பக்கத்தில் தங்கள் காதலர்களுடன் சண்டை பிடித்துக் கொண்டே போகி றார்களாம் :

266
ஊடிய மனத்தினர்,
உறாத நோக்கினர்,
நீடிய உயிர்ப்பினர்,
நெரிந்த நெற்றியர்,
தோடவிழ் கோதையும்
துறந்த கூந்தலர்.
ஆடவர் உயிரென
அருகு போயினர் !

---

* பாரதியார் - கண்ணன் பாட்டு.

[[illegible] — பணக்குக் கொண்ட. [illegible]
பார்வை. நீடிய—நீண்ட. உயிர்ப்பு—மூச்சு. தோடு— பூ இதழ்கள்.
ழ் — மலர்ந்த. கோதை — பூமாலை. அருகு — அருகில்.]

கணவரும் மனைவியரும் பேசிக்கொண்டேபோகும்போது திடீரென்று ரு கலகம். காரணம், கடவுளுக்குத்தான் வெளிச்சம்! ஆம், காதலர் கலகம் லவா? புருஷரைப் பார்த்துப் பேசிக்கொண்டே வந்தவர்கள் இப்போது ர்களைப் பாராமல் வேறு எங்கேயோ பார்த்துக்கொண்டே போகிறார்க ம். இடையிடையே பெருமூச்சு விடுகிறார்கள்; ஏன் அவ்வளவு சோகம்! தலர் சமாதானப்படுத்தியும், கோபம்தான் அதிகப்படுகிறது. இவர்கள் இப்போது பூ மாலையையும் கூந்தலிலிருந்து வீசி யெறிகிறார்கள்.

இவ்வளவு கலகத்திலும் உள்ளுக்குள்ளே என்னவோ ஆசைதான்! தனால்தான் இவர்கள் விலகி ஒதுங்கிப் போகாமல்,

ஆடவர் உயிரென
அருகு போயினர்!

அதோ வண்டியில் போகிறாளே, அவள் யார்? அந்த வண்டியில் வளைத் தூக்கிவைத்த கணவன் வண்டியைப் பற்றிய வண்ணமே தொடர்ந்து போய்க்கொண்டிருக்கிறான். அவனும் அவளும் ஒருவரை



யொருவர் பார்த்துக்கொள்ளும் அந்தப் பார்வையே போதும், பே
வேறு வேண்டுமோ?

பாண்டிலில் வைத்தவர்
பாவை தன்னொடும்
ஈண்டிய அன்பினன்
ஏகு வானிடைக்
267 காண்டலும், நோக்கிய
கடைக்கண் அஞ்சனம்,
ஆண்தகைக்(கு) இனியதோர்
அமுதம் ஆயதே!

[பாண்டில் — வண்டி. பாவை — அழகான பெண். ஈண்டிய
பினன் — மிக்க அன்பினனுகி. ஏகுவானிடை — தொடர்ந்து ஓடி
கிறவனிடம். காண்டலும்—(இங்கே) தன் பார்வையைச் செலுத்தியது

அப்படி வண்டியைப் பிடித்துக்கொண்டு செல்வது ஆடவன் உட
தான்! அன்போ இன்னும் எவ்வளவோ அதிகமாக நெருங்கி யிருக்கிற
அந்த இளைஞனை அவளும் இடையிடையே பார்க்கிறாள் கடைக்கண்ண
மை தீட்டிய கண்கள். அப்போது அந்தக் கடைக் கண்ணிலே தோன்
அஞ்சனம் அவனுக்கு அஞ்சனமாகவா தோன்றுகிறது? கருத்துப்புதைய
அன்புப் புதையலைக் காட்டிக் கொடுக்கும் அஞ்சனமாகவும் தோன்றுகிற

அப்படி வண்டியோடு நீண்ட வழியே ஓடி வந்தும் களைப்புத் தோ
வில்லையாம் அவனுக்கு. அமிர்தம் உண்டவனைப்போல் 'என்றும் இளைஞ
விட்டான். இளைப்பே இல்லாத இளைஞனுகிவிட்டான், அந்தப் பார்வைய

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

74. சில யாத்திரைக் காட்சிகள்

யாத்திரை போகும் ராஜ சைனியத்தில் ஒரு குதிரை துள்ளிப் பாய்கிறது: அவள் தவறிக் கீழே விழத் தொடங்குகிறாள். யார்? ஆம், அந்தக் குதிரை மேல் சவாரி செய்து கொண்டிருந்தவள் தான். ஆனால் அவள் கீழே விழுந்து விடாமல் பளிச்சென்று இரண்டு கைகள் தாங்கிக் கொள்ளுகின் றன. இவ்வளவு ஜாக்கிரதையாகத் தாங்கிக் கொள்ளும் அந்தப் பேர்வழி யார்? அப்பால் என்ன நடக்கிறது?

> சுழிகொள் பாய்பரி
> துள்ள,ஓர் தோகையாள்
> வழுவி வீழலுற்
> றாளை,ஓர் வள்ளல்தான்,
> எழுவின் நீள்புயத்
> தால்எடுத்(து) ஏந்தினான்,
> தழுவி நின்றொழி
> யான்,தரை மேல்வையான்!

[பரி — குதிரை. தோகையாள் — தோகை விரித்த மயில் போன்ற பெண். வழுவி — தவறி. எழு — இரும்பினால் செய்த தூண். நீள் புயம்— ண்ட புஜம்.]

அந்தக் குதிரையை நல்ல சுழிகளோடு கூடிய உத்தம ஜாதிக் குதிரை ன்று சுட்டிக் காட்டி, கூந்தல் குலைய, ஆடையாபரணங்கள் குலைய ழுந்து கொண்டிருக்கும் அவளையும், மயில் போன்ற அந்தச் சாயலையும் தோகையாள்" என்று காட்டுவதைப் பாருங்கள்.

அவளுக்கு அபாயம் நேராமல் தன் கையால் தாங்கிக் கொள்ளும் வனை "வள்ளல்" என்று கூறுவது கொஞ்சம் ஹாஸ்யமாகவே இருக்கி து. உண்மையில் அது அப்படி ஒன்றும் வள்ளன்மையும் இல்லை, வீரமும் ல்லை; சுயநலம் தான். அவன் வேறு யாருமில்லை, அவன் அருகே இருந்த தலைவன்தான். இருப்புத் தூண் போல் வலிமை வாய்ந்த அந்த நீண்ட களால் அவன் அவளை எடுத்து ஏந்துவதைக் கவிஞன் நமக்குக் காட்டி டு, "அவன் அவளைத் தரைமேல் வைக்கவுமில்லை. அவளை இறங்க

என்று எவ்வளவு குறும்பாக அந்த அசட்டுத்தனத்தை 'அதோ பாருங்கள்'
என்று சுட்டிக் காட்டுகிறான் !

*   *   *   *

வேறொரு வீரன் மதயானை போல் மதோன்மத்தனாகப் போகி-
றான் வேலும் கையுமாக. தன் வேலாயுதத்தின் கூர்மையைப் பற்றி அவ-
னுக்குப் பிரமாதமான அபிப்பிராயம். எத்தனையோ போர்க் களங்களில்,
எத்தனையோ பகைவர் உடல்களில், சோதித்துப் பார்த்திருக்கிறான் அல்-
லவா? ஆனால் இப்போதோ "நம் கையிலுள்ள வேலாயுதத்திற்குக் கூர்மை
இருக்கிறதா?" என்றே சந்தேகம் வந்து விடுகிறதாம். ஏன்? இந்த
வேலாயுதத்தைக் காட்டிலும் எவ்வளவோ அதிகக் கூர்மையுள்ள வேறொரு
ஆயுதத்தைப் பார்த்து விட்டான் பக்கத்திலே. அந்தக் கூர்மையோடு
ஒப்பிட்டதும் இந்தக் கூர்மை கூர்மையில்லை! என்றே தோன்றுகிறது.
அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துத்தான் இந்தத் தீர்மானத்திற்கு இவன் வரப்
பார்க்கிறான் என்று கவிஞன் குறிப்பிடுகிறான் :

சுழியும் குஞ்சி
    மிசைச்சுரும்(பு) ஆர்த்திடப்
பொழியும் மாமத
    யானையிற் போகின்றான்,
261
கழிய கூரிய
    என்றொரு காரிகை
விழியை நோக்கித்,தன்
    வேலையும் நோக்கினான் !



[சுழியும்
குஞ்சி மிசை —
சுழிந்து
தன் மயிர் மீது
சுரும்பு—வண்
கள். ஆர்த்திட
— ஆரவாரி
கும்படி. யானை
யின் — யானை
போல. கழிய
மிகவும். கூரி
— கூர்மையான
வை. காரிகை
பெண்.]

இந்த வீர
அந்தக் காத
வின் விழியை
பார்த்தது
தன் வேலாயு
த்தையும் பார்
தான். விழியை
யும் வேலையு
மாறி மா

... போல அவ்வளவு கூர்மை இருக்கிறதா ...ந்த வேலாயுதத்தில் ?'' என்றுதான் அப்படி அடிக்கடி ஒப்பிட்டுப் பார்க்கி ...றன். முடிவில், தன் வேலாயுதத்தைக் காட்டிலும் அவன் விழியே மிகவும் ...ர்மையானது என்று சித்தாந்தம் செய்கிறன். இந்த வேல் எதிரிகளின் ...டம்பில் மாத்திரம் பாய்ந்து துளைத்துச் செல்லுகிறது. அந்தக் கண் ...களோ தன்னுடைய உயிரிலேயே பாய்ந்து துளைக்கின்றன அல்லவா ?

* * * *

மற்ருெரு காட்சி. இன்னொரு வீரன் தன் காதலியோடு உல்லாச ...ாக உரையாட விரும்புகிறன். அவளோ ஒரே பிடிவாதமாய்ப் பேச ...ாட்டேன் என்கிறள். அவ்வளவு கோபம். அந்தக் கோபத்தையும் தன் ...ாயால் வெளியிட மறுக்கிறள். (காதலியின் கோபத்திற்குத் தான் கார ...ாம் தேவையில்லையே!) உள்ளத்திலே பொங்கும் கோபம் கண்களில் ...ஜாலிக்கிறது. அந்தக் கண்களால் இப்போது பேசுகிறளே ஒழிய, வாய் ...றந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஆனல் காதலனுக்கு அதிர்ஷ்டம் வந்து விட்டது. ஓர் ஆருகவே ஓடி ...ந்து விட்டது. வேறென்றுமில்லை, அவர்கள் செல்லும் வழியிலே ஒரு ...ாட்டாறு குறுக்கிடுகிறது. சிற்ருறுதான், ஆழமில்லை. எனினும் ஆடை ...னையாமல் கூடுமானல் காலும் நனையாமல், கரையேற வேண்டும் என்பது ...ான் அவள் எண்ணம். அந்த எண்ணத்தை எப்படியோ அவன் தெரிந்து ...காண்டு பேசுகிறன். சத்தம் போடாமல் கேளுங்கள் :

கூற்றம் போலும்
    கொலைக்கணி ளுல்அன்றி
மாற்றம் பேசுகி
    லாளை, ஓர் மைந்தன்தான், 270
''ஆற்று நீரிடை
    அங்கைக ளால்எடுத்(து)
ஏற்று வார்உமை
    யாவர்கொ லோ ?'' என்ருன்.

[கூற்றம் — யமன். மாற்றம் — விடை, பதில். பேசுகிலாளை — ...சாதவளை. மைந்தன் — புருஷன். அங்கை — அழகிய கை.]

அவளுடைய கண்களைக் 'கொலைக் கண்கள்' என்றும், கூற்றம் ...ான்ற கொலைக் கண்கள் என்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. ...க் கோபப் பார்வையைக் கண்டதும் அந்த வீரனுடைய உள்ளம் ...ண பாடுபடுகிறது! கூற்றம் என்ருல், 'உயிரையும் உடம்பையும் கூறு ...ாட்டுப் பிரித்துவிடும் யமன்' என்று பொருள். அந்தக் கண்களும் தன் ...டைய உயிர் வேறு உடம்பு வேருகப் பிரித்துவிடுமோ ?— என்று அஞ்சு

ளையிலிருந்து அவனை விடுவிக்
போவது வழியிலே சிறிது தூரத்தி
எதிர்ப்படும் சிற்றாறுதான்.

அந்த ஆற்றை மனமார வாழ்த்
கிறான். இப்போது தன் காதலிய
நோக்கி, "நீர் இப்போது பே
மடந்தையாகி விட்டீர்! சரி, அ
ஆற்றைக் கடந்து செல்லும்போ
உம்மை யார் கையால் தூக்கிக் க
யேற்றுவார்? நீர் திருவாய் திறந்
வேண்டிக் கொண்டால் தா
அல்லது 'அப்படிச் செய்ய வேணு
என்று சொன்னால்தான், நா
உம்மைத் தூக்கிக்கொண்டு பே
வேன். சரி, சரி, இந்த மௌன
விரதம் எவ்வளவு காலத்துக்கு நி
நிற்கப் போகிறது பார்க்கலாம்
என்று சொல்லுகிறான். அந்த
காரணமில்லாத கோபத்திற்கு
வளவு குறும்பான பதில் இது?

"இப்போது உம்மோடு பேச்
கும் நான் உரியவன் இல்லை என்
எண்ணுகிறீரே! ஆனால் அப்போ
நான் உம்மைத் தொட்டுத் தூக்
வதற்கு மாத்திரம் உரியவன் ஆ
விடுவேனோ?" என்ற கேள்விய
வெகு குறும்பாய்த் தொனிக்கிற

ஆற்று நீரிடை
  அங்கைக ளால்எடுத்(து
ஏற்று வார்உமை
  யாவர்கொ லோ?

என்ற கேள்வியிலே.

இந்தக் காதலன் தன் கைகளை
'அங்கைகள்' (அழகிய கைக
என்று ஏன் ஸ்தோத்திரம் பண்
கொள்ளுகிறான்? அவளைத் தூக்
அந்தப் பாக்கியத்தைப் பெறப் போ
தால்தான் இந்த ஆத்மஸ்தோ
திரமோ?—என்று கூட ஒரு கே
நம் உள்ளத்திலும் எழுகிறது. பே
கள், காதலர்களே இப்படித்தா

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

75. வேறு சில காட்சிகள்

29

சேனையின் ஒரு பக்கத்தில் ஒட்டகங்கள் போய்க் கொண்டிருக்கின்றன, பெரும் பாரம் சுமந்து கொண்டு. வழி நெடுக எத்தனையோ இனிமையான தளிர் வகைகளைப் பார்த்தபோதிலும் அவை அவற்றைத் தின்னாமலே போய்க் கொண்டிருக்கின்றன. கசப்பான வேப்பிலை முதலிய வற்றையே தேடித் தின்னுகின்றன. அந்தக் கோணல்-பிராணிகளைப் போல் மனிதர்களிலும் கோணல்-உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறார்களல்லவா?

தள்ள ரும்பரம்
　　தாங்கிய ஒட்டகம்,
தெள்ளு தேங்குழை
　　யாவையும் தின்கில, 271
உள்ளம் என்னத்தம்
　　வாயும் உலர்ந்தன,
கள்உண் மாந்தரில்
　　கைப்பன தேடியே!

187

[தள்ளரு — இறக்குவதற்கு அருமையான. பரம் — பாரம். தெள்ளு — தெளிந்த. தேங்குழை — இனிய தளிர்கள். தின்கில — தின்னாதன வாய். உள்ளம் என்ன — உள்ளம் உலர்ந்தாற்போல. உண் — உண்ணும். மாந்தரில் — மனிதர் போல.]

சில பேர்வழிகள் பால் முதலிய தீஞ்சுவை-உணவுகளைக் கூட விரும்பாமல், கள்ளைக் குடிப்பதிலேயே தீவிரமாய் இருக்கிறார்கள். அவர்களை ஞாபகப் படுத்துகின்றனவாம் ஒட்டகங்கள்.

* * *

வழியில் புருஷர்களும் பெண்களும் பொழுது போக்காக ஏதேதோ கதைகள் சொல்லிக் கொண்டு போகிறார்கள். அப்படிப்பட்ட கூட்டங்களில் ஒன்றைக் கவனிப்போம். சில இளைஞர்கள் வேறு கதை ஒன்றும் சொல்லத் தோன்றாமல் ராமன் வில் முறித்த செய்தியைத்தானே கதைபோல உத்சாகமாய்ச் சொல்லிக் கொண்டு போகிறார்களாம். "என் அப்பன் வில் முறித்தான்!" என்று அந்த விவரங்களை வர்ணித்துக் கொண்டே போகிறார்களாம். அதைக் கேட்கப் பெண்களுக்கு இருந்த ஆசையும் ஆத்திரமும் கொஞ்சமோ?

சந்த வார்குழல்
சோர்பவை தாங்கலார்,
சிந்து மேகலை
சிந்தையும் செய்கலார்,
'எந்தை வில்இறுத்
தான்'எனும் இன்சொலை,
மைந்தர் பேச,
மனம்களித்(து) ஓடுவார்.

[சந்தவார் குழல்—அழகிய நீண்ட கூந்தல். சோர்பவை — அவிழ்ந்து தொங்குவன. தாங்கலார் — தாங்கிக் கொள்ளாதவராகி. சிந்து — சிந் கிற. மேகலை — இடுப்பில் அணியும் ஒட்டியாணம் போன்ற ஒருவகை ஆபரணம். செய்கலார் — செய்யாதவர்களாய். எந்தை — என் அப்பன் இறுத்தான் — முறித்தான். இன்சொல் — இனிய சொல். மைந்தர் — (இங்கே) இளைஞர்.]

வில் முறித்த கதையை மைந்தர் பேச அதைக் கேட்டுக் கொண்டே ஓடுகிறார்களாம் பெண்கள். அந்த வேகத்தில் கலைந்து அவிழ்ந்து போன கூந்தலை முடித்துக் கொள்ள வில்லை; முடித்துக் கொள்ளும்படி கைகளால் கூந்தலை ஏந்திக் கொள்ளவும் இல்லையாம். இடுப்பில் அணிந்த மேகலை சங்கிலிகள் அற்று விழுந்ததையும் பொறுக்கி யெடுக்க வில்லையாம். அவ றைக் கவனிக்கவே யில்லையாம். ராமன் வில் முறித்த அந்தக் கதையில் அவ்வளவு ஈடுபாடு, அவ்வளவு ஏகாக்ர சித்தம்.

• • •

ஒரு பக்கத்திலே தேர்களும் யானைகளும் குதிரைகளும் செல் தால் ஏற்படும் ஒலிகள், முரசுகள் அடிக்கும் ஒலியோடு சேர்ந்து ஒ



பேரொலியாகி விட்டன. அந்த ஓசையில் ஒருவர் பேசுவது மற்றொருவருக்குக் கேட்க வில்லை.
எனவே, அந்தக் கூட்டம் ஊமைகளின் கூட்டம்போல் ஒருவரோடு ஒருவர் பேசாமலே போய்க் கொண்டிருக்கிறதாம்.



188

குரைத்த தேரும்
களிறும் குதிரையும்
நிரைத்தீ வார்முர
சும்நிமிர்ந்(து) எங்கணும்
இரைத்த பேரொலி
யால், இடை யாவரும் 273
உரைத்(து) உணர்ந்திலர்,
ஊமரின் ஏகினர்.

[குரைத்த — ஒலித்த. களிறு — யானை. நிரைத்த — வரிசையான. வார் — நீண்ட. நிமிர்ந்து — மிகுந்து. இரைத்த — சப்தித்த. இடை — அவ்விடத்திலே. ஊமரின் — ஊமைகளைப் போல.]

அவர்கள் "உரைத்து உணர்ந்திலர்" என்பது கவனிக்கத் தக்கது. ஒருவர் கருத்தை ஒருவர் பேசித் தெரிந்து கொள்ளவில்லையாம்; ஜாடையினால்தான் அறிந்துகொண்டார்களாம்.

* * *

சில மைல் தூரம் தாண்டிச் சென்றால் வேறொரு காட்சி. பெண்கள் அதி நுட்பமாக நெய்த துணிகளை மேலே போட்டிருக்கிறார்கள். சிலந்தி பின்னுகிற வலை மாதிரி அவ்வளவு நுண்ணிய ஆடை! அவர்கள் கூந்தல் நிறையப் பூச்சூடி யிருப்பதால் வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்றனவாம். நடந்து செல்லும் போது பாத சரங்களும் சிலம்புகின்றன. கொஞ்ச தூரத்திலிருந்து பார்க்கும் போது பறவைகள் ஒலிக்கும் தடாகம் அப்படி இடம் பெயர்ந்து போவது போலத் தோன்றுகிறதாம்;

நுட்சி லம்பி
வனைந்தன நுண்துகில்,
கட்சி லம்பு
கருங்குழ லார்குழு, 274
உட்சி லம்பு
சிலம்பஒ துங்கலால்,
புள்சி லம்பிடு
பொய்கையும் போன்றதே!

[நுட்சிலம்பி வனைந்தன — சிலந்தி பின்னுகிற நுட்பமான வலை மாதிரி. நுண் துகில் — மிகவும் மெல்லிய ஆடை. கள்—(இங்கே) வண்டுகள். சிலம்பு — ஒலிக்கிற. கருங்குழலார் — கரிய கூந்தலையுடைய பெண்கள். குழு — கூட்டம். உன்சிலம்பு சிலம்ப — பாதசரங்கள் ஒலி செய்ய. ஒதுங்கலால் — நடந்து போவதால். புள் சிலம்பிடு — பறவைகள் சப்திக்கிற. பொய்கை — தடாகம்.]

அதோ தாமரைத் தடாகத்தில் அன்னம் போல் தாதிமார் சூழப் பல்லக்கில் போகிறாளே அவள் யார்? அவள்தான் தசரத சக்ரவர்த்தியின் தேவியான கைகேயி.

பொய்கையங் கமலக் கானில்
  பொலிவதோர் அன்னமென்னக்
கைகயர் வேந்தன் பாவை,
  கணிகையர் ஈட்டம் பொங்கி
275 ஐயிரு நூறு சூழ,
  ஆய்மணிச் சிவிகை தன்மேல்,
தெய்வமங் கையரும் நாணத்,
  தேனிசை முரலப் போனாள்.

[பொய்கை அம் கமலக்கானில் — தடாகத்திலுள்ள அழகிய தாமரைக் காட்டிலே. பொலிவது — விளங்குவதாகிய. கைகயர் வேந்தன் பாவை — கேகய ராஜாவின் மகளாகிய கைகேயி. கணிகையர் — தாசிகள். ஈட்டம் — கூட்டம். ஐயிருநூறு — 5 × 200 = ஆயிரம். ஆய்மணிச் சிவிகை — ஆராய்ந்து பதித்த ரத்தினங்களோடு கூடிய பல்லக்கு. தேன்-(இங்கே) வண்டுகள். முரல — ஒலிக்க.]

இரத்தினப் பல்லக்கில் கைகேயி போக, நீலமணிச் சிவிகையில் சுமித்திரா தேவி மேகத்தில் தோன்றும் மின்னல் போலப் போகிறாளாம்.

குருமணிச் சிவிகை தன்மேல்
  கொண்டலின் மின்னி தென்ன
276 இருவரைப் பயந்த நங்கை
  யாழிசை முரலப் போனாள்.

[குருமணி — (இங்கே) பருத்த நீல ரத்தினங்கள். கொண்டல் — நீர் கொண்ட மேகம். இருவரை – லக்ஷ்மணன் சத்ருக்னன் என்ற இரட்டைப் பிள்ளைகளை. பயந்த – பெற்ற. யாழிசை – இங்கே வீணாகானம்.]

நீலமணிப் பல்லக்கில் போவதால் சுமித்திரை மேகத்தில் தோன்றும் மின்னல் போலக் காண்கிறாள்.

பிரதான பட்டமகிஷியும் ராமன் தாயுமான கௌசலா தேவியும் தன்னுடைய மணிச்சிவிகையில் போகிறாள். நக்ஷத்திரங்கள் போல் ஒளிரும் பல மணிகள் அழுத்திய அந்தச் சிவிகைக்கிடையே கௌசலையின் முகம் பிரகாசிக்கிறது. அந்த முக மண்டலத்தைச் சந்திரன் என்று மயங்கி வானத்தில் சிதறிக் கிடந்த நட்சத்திரங்கள் ஒருங்கே சேர்ந்து வந்து இப்படிச் சூழ்ந்து கொண்டனவோ? — என்று வியக்கும்படி இருக்கிறதாம் அந்தத் தோற்றம். பாடகர்கள் இசையாகிய தேன் சொரிய,

277 வள்ளலைப் பயந்த நங்கை
  வானவர் வணங்கப் போனாள்.

[வள்ளல் — (இங்கே) ராமன்.]

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

76. "மற்றொரு கதிரோன்"

பல முனிவர்கள் சூழப் புறப்பட்டார் குல குருவான வசிஷ்டர். இப்போது இவரைப் பார்த்தால் பிரம்ம குமாரரான வசிஷ்ட மகரிஷியாகக் கூடத் தோன்றவில்லையாம். ஸாக்ஷாத் பிரம்மதேவனே அன்னவாகனத்தில் ஆரோகணித்துத் தன் சிருஷ்டி - சக்தியுடனும் சிருஷ்டி - உத்ஸாகத்துடனும் போவதுபோலத் தோன்றுகிறதாம், முத்துப் பல்லக்கில் இந்தப் பெரியவர் அப்படிச் செல்லும்போது. அவ்வளவு ஞான ஒளி, உத்ஸாகம் — அப்பேர்ப்பட்ட தெய்விக தேஜஸ் :

கவிகையின் நீழல், கற்பின்
அருந்ததி கணவன், முத்துச் 278
சிவிகையின் அன்னம் ஊரும்
திசைமுகன் என்னச் சென்றான்.

[கவிகை — குடை. நீழல் — நிழலில். சிவிகை — பல்லக்கு. ஊரும் — வாகனமாகக்கொண்டு ஏறிச் செல்லும். திசைமுகன் — பிரம்மதேவன்.]

வசிஷ்டருக்குப் 'பிரம்ம குமாரர்' என்ற பெருமையைக் காட்டிலும், பிரசாந்த மாட்சியைக் காட்டிலும் 'அருந்ததி கணவர்' என்ற பெருமை விசேஷமானது என்பது குறிப்பு.

* * *

வசிஷ்டருக்கும் பின்னே பரத சத்ருக்னர் இருவரும் போகிறார்கள். யானைகளும் குதிரைகளும் தேர்களும் காலாட்படைகளும், மலையைச் சூழ்ந்து போகும் கடல்போல இவர்களைச் சூழ்ந்து போகின்றனவாம். அந்தப் பெருங் கூட்டத்திலும் இந்த இருவர் தோற்றம் எவ்வளவு தெளிவாகத் தென்படுகிறது :

பொருகளி(று), இவுளி, பொற்றேர்,
பொலங்கழல் — குமரர், முந்நீர்
அருவரை சூழ்ந்த தென்ன,
அருகுமுன் பின்னும் செல்லத், 279
திருவளர் மார்பர், தெய்வச்
சிலையினர், தேரர், வீரர்
இருவரும், முனிபின் போன
இருவரும் என்னப் போனார்.

[பொருகளிறு — போர் செய்வதற்கு உரிய யானைகள், இவுளி — குதிரை. பொற்றேர் — பொன் தேர், அழகிய தேர். பொலங்கழல் —

பொன்னாலாகிய வீரக்கழல். [illegible] — (இங்கே) காலாட் படையை சேர்ந்த வீரர்கள். முந்நீர் — கடல். அருவரை — அரிய மலை. அருகு — அருகாக. திரு — (இங்கே) ஜய லட்சுமி. சிலை — வில். முனி — (இங்கே) விச்வாமித்திரர்.]

பரத சத்ருக்னர்களும் ராமலக்ஷ்மணரைப் போல் குழந்தைப் பருவம் தொடங்கி ஒருவரை ஒருவர் பிரியாத பேரன்புடையவராக இருந்தார்கள். இவர்களுக்கு ராமலக்ஷ்மணர்களே லக்ஷ்ய சகோதரர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தார்கள். எனவே, வசிஷ்ட முனிவர் பின்னே போகும் இந்தச் சகோதரர்களுக்கு விச்வாமித்திர முனிவர் பின்னே போன ராம லக்ஷ்மணரை உவமை ஆக்குவது எவ்வளவு பொருத்தம்!

தேரில் போகும் அந்த இளைஞர்களுடைய வளர்ச்சியையும், வில்லும் கையுமாகச் செல்லும் கம்பீரமான தோற்றத்தையும், கரி பரி தேர் காலாள் என்ற நால்வகைப் படைக்கும் நடுவே 'அதோ பாருங்கள்!' என்று வியந்து சுட்டிக் காட்டுவது போல் கவிஞன்,

220 திருவளர் மார்பர், தெய்வச்
சிலையினர், தேரர், வீரர்

என்று எவ்வளவு வசீகரமாய்க் காட்டி விடுகிறான்!

இங்கே 'சப்த ஜாலம்' இந்திர ஜாலம் போல், அந்த இருவரையும் திமிர்ந்த மார்புடன் அவர்கள் போகும் போக்கிலே காட்டி விடுகிறது, தேரோடும் வில்லோடும். நாமும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம் அந்த வளர்ச்சியையும், தெய்விக இளமையையும், வீர சௌந்தர்யத்தையும்!

• • • •

இனி, தசரத சக்ரவர்த்தி மிதிலைக்குப் புறப்பட்டுப் போகும் அந்தச் சிறப்பையும் கவனிப்போம் :

நித்திய நியமம் முற்றி,
நேமியான் பாதம் சென்னி
வைத்தபின், மறைவல் லோர்க்கு
வரப்பறு மணியும், பொன்னும்,
221 பத்திஆன் நிரையும், பாரும்
பரிவுடன் நல்கிப் போனான்,
முத்தணி வயிரப் பூணான்
மங்கல முகூர்த்த நன்னாள்.


[நித்திய நியமம் — நித்தியக் கடனாகிய ஜபம் முதலியன. நேமியான் — சக்ராயுதத்தை யுடைய மகா விஷ்ணு. சென்னி — தலை. மறைவல்லோர் — வேதங்களில் வல்லவர்கள். வரப்பறு — வரம்பு அற எல்லையில்லாத. மணி — ரத்தினம். பத்தி — வரிசை. ஆன்நிரை — பசுக் கூட்டம். பார் — பூமி. பரிவு — அன்பு. அணி வயிரம் — அழகிய வயிரக் கற்கள். பூண் — ஆபரணம்.]

ஜபம் பிரார்த்தனை முதலியவற்றை முடித்துக்கொண்டு, அறிஞர்களுக்கு வேண்டியவற்றைத் தானம் செய்து விட்டு, மங்களமான நல்ல நாளில் மிதிலைக்குப் புறப்படுகிறான் சக்ரவர்த்தி. வேத மந்திரங்களை ஓதிய வண்ணம் மந்திர நீரால் புரோட்சித்து வாழ்த்துகிறார்கள் வைதிகர்கள்.

அப்போது அரசர்கள் திரண்டு வந்து சக்ரவர்த்தியை நெருங்குகிறார்கள். அவனது சேவைக்காக அயோத்திமா நகரில் வந்து காத்திருந்தவர்கள். அரண்மனைச் சங்கு முழங்கியது கேட்டு, இவர்களில் சிலர் "இன்று என்ன விசேஷம்?" என்று வினவினார்களாம். உடனே வேறு சில அரசர்கள், "சக்ரவர்த்தி புறப்படுகிறாரோ?" என்று ஒரு பதில் கேள்வி கேட்டார்களாம். பிறகு அரசர்கள் யாவரும் சக்ரவர்த்தியுடன் போக வேண்டுமென்று தாங்களும் புறப்படுகிறார்கள்.

அந்த வேகத்தில் காதில் அணிந்திருந்த குண்டலம் கீழே விழுந்து விடுகிறதாம். "விழுந்து விட்டதே!" என்று சொல்லி எடுத்து அணிந்து கொண்டு புறப்படுவதற்குள், சக்ரவர்த்தி கொஞ்ச தூரம் போய் விட்டதால், "இனிப் போய் நாம் சக்ரவர்த்தியைக் கிட்டுவது அருமைதான்!" என்று இவர்கள் சொல்லிக்கொண்டே விரைந்து போகிறார்களாம்:

"கண்டிலன் என்னை!" என்பார்,
"கண்டனன் என்னை!" என்பார்;
"குண்டலம் வீழ்ந்த தெ"ன்பார்,
"குறுகரி(து) இனிச்சென்(று)" என்பார்;
"உண்டுகொல் எழுச்சி?" என்பார்,
"ஒலித்தது சங்கம்" என்பார்
மண்டல வேந்தர் வந்து
நெருங்கினர் மயங்கி மாதோ!



[கண்டிலன் — காணவில்லை. குறுகரிது — குறுக அரிது, குறு குதல் அல்லது கிட்டுதல் அருமையானது. உண்டுகொல் — உளது போலும். எழுச்சி — புறப்பாடு. மாதோ — பாட்டின் இசையை நிரப்புவதற்குக் கடைசியாக வரும் அசை.]

எவ்வளவோ சிரமப்பட்டுச் சக்ரவர்த்தியை நெருங்கி வந்து விட்ட சிற்றரசர்களுக்குள்ளும் விவகாரம்தான், "சக்ரவர்த்தி என்னைப் பார்த்தாரா? உன்னைப் பார்த்தாரா?" என்றெல்லாம்.

* * *

பெண்கள் பொன்வளை முதலான ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டு கூட்டம் கூட்டமாகக் குதிரைகளின் மீது போகும் போது, கடலலைகள் மீது தாமரை மலர்கள் மலர்ந்து போவது போலத் தோன்றுகிறதாம். அந்தக் குதிரை - வெள்ளந்தான் அப்படி அலையலையாகப் போகிறது. சக்ரவர்த்தியைக் கண்ட அந்த ஸ்திரீகளின் முகங்கள் சூரியனைக் கண்ட தாமரைபோல் அப்படி மலர்ந்திருக்கின்றன.

சில தாமரைகள் அப்படி மலர, அதே சூரியனைக் கண்டு குவியும் தாமரைகளும் உண்டு என்கிறான் கவிஞன். ஆம், சக்ரவர்த்தியைக் கண்ட சிற்றரசர்களின் கைகளாகிய தாமரைக் கூட்டங்கள் குவிகின்றனவாம். அவர்கள் மகிழ்ந்து போக, இவர்கள் அரசனை நோக்கி வணக்கம் தெரிவித்துப் போகிறார்கள்.

பொற்றொடி மகளிர் ஊரும்
    பொலன்கொள்தார்ப் புரவி வெள்ளம்,
சுற்றுறு கமலம் பூத்த
    தொடுகடல் — திரையில் செல்லக்,
கொற்றவேல் மன்னர் செங்கைப்
    பங்கயக் குழாங்கள் கூம்ப,
மற்றொரு கதிரோன் என்ன
    மணிநெடுந் தேரில் போனான்.

[பொற்றொடி — பொன்வளை. ஊரும் — ஏறிச் செல்லுகிற. பொலன் கொள் தார் — பொன்னால் செய்த கிண்கிணிமாலை. (இந்த மாலையைக் குதிரைகளுக்கு அணிவது அக்கால அரசர் வழக்கம்.) சுற்றுறு — சுற்றிலும் பொருந்திய. தொடுகடல் — தோண்டப் பட்ட (சகரர்களால் தோண்டப்பட்டதாய்ச் சொல்லப்படும்) கடல். திரை — அலை. கொற்றம் — வெற்றி. பங்கயம் — தாமரை. குழாம் — கூட்டம். கூம்ப — குவிய. கதிரோன் — சூரியன். மணி நெடுந்தேர் — மணிகள் கட்டிய நீண்ட தேர்.]

சூரியன் தாமரை மலர்களை மலரச் செய்வான், குவியச் செய்வதில்லை. சக்ரவர்த்தி என்ற இந்தச் சூரியனோ பெண்களின் முகத் தாமரைகளை மலரச் செய்வதோடு, சிற்றரசர்களின் செங்கைத் தாமரைகளைக் கூம்பிக் குவியவும் செய்து விடுகிறானாம். எனவே இவனை "மற்றொரு கதிரோன்" என்று சாதுரியமாகக் குறிப்பிடுகிறான் கவிஞன்.

சக்ரவர்த்தி யாத்திரை புறப்பட்ட இக் காட்சியில் இந்த மன்னர் மன்னனுடைய மாட்சியும் பெருஞ் சிறப்பும் வாசகர்களின் உள்ளத்தில் தெளிவாகப் பதியும்படி வர்ணிக்கப்படுகின்றன.

பி. ஸ்ரீ. 33

77. பெருஞ் சிறப்பும்—ஒரு பெரும் பிரச்னையும்

வலம்புரிச் சங்கும் ஊதுகொம்பும் எக்காளமும் மங்களகரமான மேள தாளங்களும் முழங்க, இடையிடையே புல்லாங்குழல்கள் இசைக்க சக்ரவர்த்தி மிதிலையை நோக்கிப் போகிறான், சந்திரவட்டக் குடை நிழலிலே, விருதுகளும் தானுமாய்.

சங்கமும் பணையும் கொம்பும்
தாளமும் காளத் தோடு
மங்கல பேரி செய்த
பேரொலி மழையை ஓட்டத்,
தொங்கலும் குடையும் தோகைப்
பிச்சமும் சுடரை ஓட்டத்,
திங்கள்வெண் குடைகண் டோடத்,
தேவரும் மருளச் சென்றான்.

24 191

[பணை — புல்லாங்குழல். கொம்பு — ஊது கொம்பு. காளம் — எக்காளம். பேரி — பேரிகை. மழை — (இங்கே) மேக கர்ஜனையாகிய இடி. தொங்கல் — அலங்காரத் தொங்கல் என்ற விருது. தோகை — மயிலின் தோகை. பிச்சம் — மயிலின் தோகையால் அலங்கரிக்கப்பட்ட குடை. சுடர் — (இங்கே) சூரியனது வெயில். திங்கள் — சந்திரன். மருள—மயங்க.]

'பேரிகை முதலியன இடியையும் அடக்கி விட்டன என்று சொல்லும்படி முழங்குகின்றனவாம். எடுத்துப் பிடித்த விருதுகள் வெயிலைத் தடுத்து விடுகின்றன. சக்ரவர்த்திக்குப் பிடிக்கிறார்களே அந்தச் சந்திர வட்டக் குடையைக் கண்டு, சந்திரனும் வெட்கமடைந்து ஓடுகிறான் என்று சொல்லும்படி அப்பால் செல்லுகிறானும். இத்தகைய மாட்சியைத் தேவர்களும் மருண்டு வியந்து பார்த்துக்கொண்டேயிருக்கிறார்களாம்.

இப்படிப்பட்ட வர்ணனைகளைக் கண்டதும், ஆங்கில இலக்கிய விமர்சன நூல்களைப் படித்துக் கொண்டிருக்கும் சில புதுமைப் புலவர்களுக்குப் பெரும் பயம்! "ஏதோ மிகைபடுத்திக் கூறுகிறான், கீழ் நாட்டுக் கவிதையே இப்படித்தான்!" என்று அவர்களில் சிலர் சொல்லக்கூடும். ஆனால் அந்த ஆராய்ச்சிக்காரர்களைக் கொஞ்சம் மறந்துவிட்டு இந்தப் பாட்டைப் பாருங்கள்; பாடிப் பாருங்கள்; பொருளிலும் ஈடுபட்டுப் பாடுங்கள். "என்ன ஸௌந்தர்ய உணர்ச்சி! எத்தகைய மனோபாவம்!" என்று நீங்களும்

மருண்டு தசரத சக்ரவர்த்தி யாத்திரை போன அந்தச் சிறப்பை வியந்த வண்ணமாய் இருப்பீர்கள்.

• • • •

அந்த மாட்சி இன்னும் வளர்கிறது மனக்கண் முன்பு. சக்ரவர்த்தியைச் சூழ்ந்து ஒலிக்கும் மங்கள ஓசைகளும் நம் காதில் விழுகின்றன :

மந்திர கீத ஓசை,
வலம்புரி முழங்கும் ஓசை,
அந்தணர் ஆசி ஓசை,
ஆர்த்தெழு முரசின் ஓசை,
கந்துகொல் களிற்றின் ஓசை,
கடிகையர் கவியின் ஓசை,
இந்திர திருவன் செல்ல,
எழுந்தன திசைகள் எல்லாம்.

[ஆர்த்து — ஆரவாரித்து. கந்து — கட்டுத்தறி. கொல்—(இங்கே) முறிக்கின்ற. களிறு — யானை. கடிகையர் — நாழிகை தெரிவித்துக் கவி சொல்லுவோர். இந்திர திருவன் — இந்திரனது செல்வம் போன்ற பெருஞ் செல்வத்தை உடையவன்.]

"தேவேந்திரனுக்குப் போட்டியாக நரேந்திரன் இவன்!" என்று மருளும்படி போகிறான் சக்ரவர்த்தி. நாலு திசைகளிலு மிருந்து வேத கோஷங்கள் எழுகின்றன. வெற்றிச் சங்குகளின் முழக்கங்களும் காதில் விழுகின்றன. இடையிடையே பெரியோர் சொல்லும் ஆசிகள், ஜய பேரிகைகள். இவற்றோடு கலந்து கொள்கின்றன யானைகள் வீரிடும் சத்தங்களும். அடிக்கடி நாழிகை தெரிவிக்கும் பாடல்களும் முழங்குகின்றன.

இந்தப் பாட்டையும் மேலே சொன்ன பாட்டுடன் சேர்த்துப் பாட வேண்டும், — இந்த நரேந்திரனுடைய மாட்சியை மானஸீகமாய்ப் பார்ப்பதற்கு. பிறகு அடுத்த பாட்டையும் பாடிப் பார்க்கவேண்டும். இந்த மூன்று பாடல்களும் சக்ரவர்த்தி சென்ற சிறப்பையும் மாட்சியையும் அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகின்றன. இந்த மந்திர வித்தையைச் சாதாரண 'எதார்த்த வாத' இலக்கிய விமர்சனம் (ரியலிஸம்) என்ற அளவு கோலால் அளந்து பார்ப்பது சரியன்று.

• • • •

கவிஞனுடைய மாத்திரைக்கோல் உயர்ந்ததும், வார்த்தையும் வர்ணனையும் 'உயர்வு நவிற்சி'யும் (exaggeration) மறைந்து விடுகின்றன. இந்த நரேந்திரனுடைய மாட்சியில் ஈடுபட்டு எத்தனை கைகள் கூம்பித் தொழுகின்றன என்பதையும், மோதிக் கொண்டு போகும் யானைகளும் தேர்களும் குதிரைகளும் காலாட் படைகளும் என்ன ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு போகின்றன என்பதையும் பிரத்யக்ஷமாய்ப் பார்க்கிறோம் :

நோக்கிய திசைகள் எல்லாம்
தன்னையே நோக்கிச் செல்ல,
வீக்கிய கழற்கால் வேந்தர்
விரிந்தகைம் மலர்கள் கூம்பத்
தாக்கிய களிறும் தேரும்
புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி, விண்ணும்
மண்ணுல காக்கப் போனான்!

[வீக்கிய — கட்டிய. கழல் — வீரக் கழல். 'கைம்மலர்கள் — கை
கிய தாமரை மலர்கள். கூம்ப — குவிய. தாக்கிய — (ஒன்ருே
ன்று) தாக்கிக் கொண்டு போகிற. புரவி—குதிரை. பதாதியர் தாள்—
லாட் படைகளின் கால்கள். தூளி— புழுதி.]

பகலிலும் இரவிலும் யாத்திரை செய்து கொண்டே போகிருன்
ரவர்த்தி, — "இந்த ராஜாதி ராஜனுடைய கடாக்ஷத்திற்கு எப்போது
த்திரமாவோம்?" என்று திசைகளெல்லாம் தன்னையே நோக்கிச் செல்
ம்படி.

இந்த நிலையில் சக்ரவர்த்தியின் பார்வை சில சிற்றரசர்களின்மீது விழு 32
ந்தது. பல இடங்களையும் ர்த்துக் கொண்டே செல் ம் அந்தப் பார்வை இப்படி செல்வது இயல்புதானே? னினும் இவனையே நோக் ச் செல்லும் அந்த அரசர் ளின் கைகள், "என்ன க்கியம் பெற்ருேம்!" ன்று தாமே கூம்பிக் குவிக் ன்றனவாம். அவர்கள் கை ப்பித் தொழுதார்கள் ன்று சொல்லாதது கவனிக் த் தக்கது.



சக்ரவர்த்தியோடு செல் லும் நால்வகைச் சேனைக ளும் தடபுடலாகப் போகும் போது சில சமயங்களில் ஒன் ருெடொன்று மோதிக் கொ ள்ளும் நிலைமையும் ஏற்பட்டு விடுகிறதாம். யானை யானை யோடு மோதுகி றது, அல்லது தேரோடு மோதிக் கொள்ளுகிறது, அல்லது குதிரை யோடு மோதிக் கொள்ளுகிறது; காலாட் படைக ளின் கால்களோடு மோதிக்கொள்ளும் நிலைமையும் ஏற்ப டக்கூடும். இப்படி யெல்லாம் செல் லும் சேனசமுத்தி ரம் எழுப்பிய புழு திப் படலத்தைத்

தான் என்னென்பது? விண்ணுலகத்தையும் மண்ணுலகமாக்கி விடு
தாம் இந்த மாட்சி.

* * * *

சேனை, பரிஜனங்களுடன் சென்று சக்ரவர்த்தி ஒரு மலைச்சார
அடைகிறான். அந்த மலைக்குச் 'சங்கிரசைலம்' என்று பெயர். அங்
கொஞ்சம் தங்கிப் போகவேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள். அ
மலையிலுள்ள அருமையான மரவகைகளைக் கண்டு களிக்கிறார்கள். இ
மலைச்சாரலில் வந்து தங்குவதற்குமுன் கருங்கற் பாறை மீது இரதங்
உருண்டு உருண்டு செல்லும் சிறப்பைத்தான் பாருங்கள் :

தெருண்ட மேலவர் சிறியவர்ச்
  சேரினும், அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர்
  எனும்இது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுருள்
  உரைத்துரைத்(து) ஓடி,
இருண்ட கல்லையும் பொன்னிறம்
  ஆக்கிய இரதம்.

[தெருண்ட — தெளிந்த. மேலவர் — பெரியோர். மருண்ட — ம
கிய. புன்மை — இழிவு; அசுத்தம். வழக்கு — நெறி; நீதி. வாய்
(இங்கே) இடம். பொன் உருள் — பொன்னாலான சக்கரங்கள்.]

சக்ரவர்த்தியும் மற்ற அரசர்களும் வந்துகொண்டிருந்த இரதங்கள
பொற்சக்கரங்கள் அமைக்கப்பட் டிருந்தனவாம். அந்தச் சக்கரங்கள் மலை
சாரலுக்கு அருகே வந்ததும் இருண்ட பாறுங்கற்கள் வழியாகச் செ
வேண்டி யிருக்கின்றன. அவற்றின் மீது உருண்டு ஓடும்போது அந்
கருங்கற்பாறைகளும் அந்த அந்த இடங்களில் பொன் நிறம் அடைகின்ற

* *

இது கவிஞனுக்கு ஒரு பெரிய பிரச்னையை ஞாபகப்படுத்துகிறது; அ
தப் பிரச்னைக்கு இங்கேயே விடையும் கிடைத்துவிட்டதுபோலத் தோன்
கிறது. பெரியவர்கள் சிறியவர்களைச் சேரலாமா?—என்பதுதான் அந்
பிரச்னை. சிறியவர்கள் தங்கள் நிலைக்குத் தாழ்த்திவிட மாட்டார்க
தங்களோடு கலந்து சிநேகம் செய்து கொண்டவர்களையும்? இத்தகை
மனநிலை தான் நமது நாட்டில் எத்தனையோ ஜாதிப் பிரச்னைகளை
ஹரிஜனப் பிரச்னைகளையும் கிளப்பி விட்டிருக்கிறது. இந்தப் பிரச்
களுக்கெல்லாம் வழி காட்டுவதுபோல், அந்தப் பொற்சக்கரங்கள் உருண்
உருண்டு உரைத்து உரைத்துப் போகும் அந்த இருண்ட கருங்கற்பா
யைச் சுட்டிக் காட்டுகிறான் கவிஞன். காட்டி, "அறிவுத் தெளிவ
பெரியோர்கள் சிறியவர்களைச் சேர்ந்து அந்த நிலைக்கு இறங்கிவிடமா
டார்கள்; அவர்களையும் தங்கள் நிலைக்கு உயர்த்திக்கொள்வதற்கே அவ
ளோடு கலந்துகொள்வார்கள்" என்று சொல்கிறான். சொல்லி, "இ
தான் பெரியோர்களின் வழக்கம்; அவர்களுடைய நீதிநெறி" என்
முடிவு கட்டுகிறான். சக்ரவர்த்தி போகிற போக்கிலே எவ்வளவு பெ
பிரச்னையும் தீர்ந்துவிட்டது பாருங்கள்!

பி. ஸ்ரீ.

35

78. மலைவளமும் சோலைவளமும்

அந்த மலைக் காட்டில் மயில்கள் ஒரு புறம் திரிகின்றன. யானை தேர்களிலிருந்து கீழே இறங்கின பெண்களின் சாயலைத்தான் அப்படியெல்லாம் திரிந்து திரிந்து நோக்குகின்றனவோ ?— என்று தோன்றுகிறதாம்.

வேறொரு புறம் குதிரைகளிலிருந்து இறங்கிய பெண்கள் அன்னங்களைப் போல் மெல்ல நடந்து நிழல் அடர்ந்த இடங்களிலே தங்குகிறார்கள். பலவகை ஆபரணங்கள் பூண்ட இவர்களைப் பார்த்தால், பூக்கள் நிறையப் பூத்துள்ள பூங்கொம்பு போலத் தோன்றுகிறதாம்: அந்த இயற்கை யழகோடு இவர்கள் அப்படி ஒன்றுபட்டுக் காட்சி அளிக்கிறார்கள்.

சில மங்கையர் வெகு தூரம் பிரயாணஞ் செய்து வந்த களைப்பினால் ஒரு பளிங்குப் பாறையில் படுத்து உறங்கத் தொடங்கி விட்டார்கள்.

இப்போதுதான் மேகங்களைப் போல வந்த சில பெண்யானைகள்மீது வந்து சேர்கிறார்கள் சில பெண்கள். அந்த யானைகள் பூமியில் படிந்து நின்றதும் பூங்கொடிகள் இறங்கி வருவதுபோல் அவற்றினின்று இறங்கி வரும் பெண்கள் நூபுரம் கலீர் கலீரென்று ஒலிக்க நடந்து போய், தாங்கள் தங்குவதற்கு அமைத்திருந்த வசதியான இடங்களில் தங்குகிறார்கள்.


பல நிறங்களோடு கூடிய குதிரைகளை வரிசையாக ஒரு புறம் கட்டி வைக்கிறார்கள். அந்த அழகையும். அவற்றின் கனைப்புகளையும், அந்தக் குதிரைகளைக் கொண்டு தந்த ராவுத்தர்களையும் கூட 'அதோ பாருங்கள்' என்று காட்டுவது போல் இருக்கிறது வர்ணனை :

துன்னெனும் முழக்கின,
  துருக்கர்தர வந்த,
மண்மகள்தன் மார்பின்அணி 28
  வன்னசரம் என்னப்
பண் இயல் வயப்பரிகள்
  பந்தியின் நிரைத்தார்.

193

[துன்னெனும் — (கேட்கிறவர்கள்) திடுக்கிடக்கூடிய. முழக்கின — கனைப்பை உடையன. மண்மகள் — பூமிதேவி. மார்பின் அணி — மார்பில் அணிந்த. வன்னசரம் — பல வர்ணமுள்ள நவரத்தின ஹாரம். பண் — அலங்காரம். இயல் — இயன்ற, அமைந்த. வயப்பரிகள் — வலிமை பொருந்திய குதிரைகள். பந்தியின் – வரிசையில். நிரைத்தார் — ஒழுங்காக நிறுத்தினார்கள்.]

வந்தவர்கள் அங்கங்கே தங்கும்படி நீண்ட திரைகளைக் கட்டினார்கள். அவர்கள் வேண்டிய பொருள்களைக் கொள்ளும்படி அமைத்த கடைகள் கடைத்தெருவாகவே அமைந்து விட்டனவாம். சில இடங்களில் யானைகளைக் கட்டிவைத்தது மேகங்களையே அப்படி அந்த மலைச்சாரலில் கட்டி வைத்தது போலத் தோன்றுகிறதாம். அங்கங்கே பல கூடாரங்கள், வீரர்களும் பெண்களும் தங்கும்படி. அவற்றுக்கிடையே ஒரு பெரிய கூடாரம் ஓர் அழகிய மாளிகைபோல் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே முரசு முழங்குகிறது; சங்கு சப்திக்கிறது. அதுதான் சக்ரவர்த்தி தங்கும் இடம்.



ஒரு பக்கத்தில் யானை முதலியவற்றிலிருந்து இறங்கி வந்த தங்கள் மனைவியர்மீது படிந்திருந்த தூசியைப் பார்த்த ஆடவர்கள் பால்நுரை போன்ற தங்கள் ஆடைகளால் அந்தத் தூசியைப் போக்குகிறார்கள். போக்கியதும் அம்மங்கையர் சித்திரக்காரரால் மாசு தீர்த்துப் புதுப்பிக்கப்பெற்ற சித்திரம் போல ஒளிர்கிறார்களாம்.

வேறொரு பக்கம் அரசகுமாரர்கள் யானைகளிலிருந்து இறங்கி, வெண்சாமரைகள் இரு புறமும் வீசக் கூடாரங்களில் பிரவேசிக்கிறார்கள்.

இன்னொரு பக்கத்தில், கணவர்கள் பிரயாணக் களைப்பால் உறங்கிவிடுகிறார்கள். பெண்களோ கோபத்துடன், "இனி நீங்கள் விழித்துக் கொண்ட

பிறகு உங்களோடு பேசமாட்டோம்!'' என்று சொல்லிக்கொண்டே கூடாரத்திற்கு வெளியே திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

குயிலொடும் இனிது பேசிச்,
சிலம்பொடும் இனிது கூவி,
மயிலினம் திரிவ என்னத்
திரிந்தனர் மகளிர் எல்லாம்.

[சிலம்பு — மலைக் குகை.]

அந்தப் பெண்கள் குயிலைப்போலக் கூவினார்களாம் — பாஷையிலே அந்தக் குயில் — தோழிகளோடு பேசுவது போலே; மயில்களைப் போல் ஆடித் திரிந்தார்களாம் சிலர், மயில்களோடு போட்டிபோடுவது போலே. வேறு சிலர் மலைக் குகைகளுக்கு எதிரே போய் நின்று கூச்சல் போட்டார்கள், அவற்றோடு பேசுவது போலே — அங்கேயிருந்து எதிரொலி கிளம்பும்படி. இப்படியெல்லாம் அவர்கள் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பக்கத்தில் இரத்தின ஹாரங்களையும் முத்தாரங்களையும் பெண்கள் கழற்றி எறிந்தார்களாம், கணவர்மீதுள்ள கோபத்தினால். தெய்வ மங்கையர்களே அப்படி அவற்றை எறிந்தார்களாம். அந்த இடத்தில் குரங்குகள் அதிகம். ஓர் ஆண் குரங்கு அந்த நகைகளைக் கண்டுபிடித்தது; ஆம், கண்டு பிடித்துக்கொண்டது கைகளால்! அவற்றைப் பெண்கள் அணிந்திருந்ததையும் அந்தக் குரங்கு ஏற்கெனவே பார்த்திருந்தது. இப்போது அது, தானே அந்த இரத்தின மாலையையும் முத்து மாலையையும் அணிந்து கொண்டது. இதே சமயம் ஓடி வந்த பெண் குரங்கு இந்தக் கோலாகலத்தைக் கண்டு மகிழ ஆரம்பிக்கிறதாம்:

அரம்பையர் வெறுத்து நீத்த
அவிர்மணிக் கோவை ஆரம்
வரம்பில, கடுவன் பூண,
மந்திகண்(டு) உவக்கும் மாதோ,

[அரம்பையர் — தெய்வப் பெண்கள். நீத்த — கழற்றிப்போட்ட. அவிர் — விளங்குகிற. மணிக்கோவை — இரத்தின மாலை. ஆரம் — முத்துமாலை. வரம்பில—எல்லையில்லாதன; மிகப் பலவான. கடுவன் — ஆண் குரங்கு. மந்தி — பெண் குரங்கு. உவக்கும் — மகிழும்.]

அந்த நகைகளை அளவில்லாமல் — எத்தனையோ முத்து மாலைகளையும் இரத்தின மாலைகளையும் — தன் கழுத்திலே ஆண் குரங்கு பூட்டிக் கொண்டதைப் பார்த்து மகிழ்ந்துபோன பெண் குரங்கு, அந்த மகிழ்ச்சியைத் தன் 'குர் குர்' பாஷையில் எப்படித் தெரிவித்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

இப்படியெல்லாம் மலைக் காட்சியை அனுபவித்து இளைப்பாறிய பின் தசரதன் தன் சேனையுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சோணை யென்னும் ஆற்றை அடைகிறான்.

முறையெலாம் முடித்த பின்னர்,
மன்னனும் மூரித் தேர்மேல்
இறையெலாம் வணங்கப் போனான்;
எழுந்(து)உடன் சேனை வெள்ளம்,

குறையெலாம் சோலை ஆகிக்,
குழியெலாம் கழுநீர் ஆகித்,
துறையெலாம் கமலம் ஆன
சோணைஆ(று) அடைந்த தன்றே.

[முறை — முறையாகச் செய்யவேண்டிய நித்திய கர்மம். மூரித் தேர் — வலிமை வாய்ந்த ரதம். இறையெலாம் — அரசர் எல்லாரும். குறை — (இங்கே) ஆற்று நீர் செல்லாத மேட்டு நிலங்கள். கழுநீர் — செங்கழுநீர் என்ற பூங் கொடிகள். கமலம் — தாமரைக் கொடி.] .

அங்கே திடராக இருந்த மேட்டு நிலங்கள் எல்லாம் சோலைகளாகவும், குழி விழுந்த இடங்கள் எல்லாம் செங்கழுநீர் முதலான பூங் கொடிகளாக வும், நீர்த் துறைகள் எல்லாம் தாமரை மயமாகவும் காட்சியளிக்கின்றன. அந்த இடத்தைச் சக்ரவர்த்தியும் சிற்றரசர்களும் படைவீரர்களும் அடைந்த சமயம், சூரியன் வானத்தின் நடுவே வந்து சேர்ந்த உச்சி நேரம்.

பெண்கள் சோலைகளுக்குள்ளே பிரவேசிக்க, அங்கேயிருந்த மயில் களும் அன்னங்களும் அப்பால் போகின்றன, சாயலுக்கும் நடைக்கும் தோற்றுப் போவது போலே. அவர்கள் தோழியர்களோடு விளையாடத் தொடங்குகிறார்கள், பூங்கொடிகளுக்கு இடையே விளையாடும் பூங்கொடிகள் போல. பேசிக் கொண்டே விளையாடுகிறார்கள்.

அவர்கள் நெருங்கி விளையாடும் போதும், பேசும்போதும் அந்தச் சோலையில் அதற்கு முன் பாடிக் கொண்டிருந்த குயில்களெல்லாம் வாய் மூடி மௌனியாகி விட்டனவாம். இதற்குக் காரணம், "பயமில்லை, வெட் கம்தான் !" என்கிறான் கவிஞன் :

கூசின அல்ல, பேச
நாணின குயில்கள் எல்லாம் !
வாசகம் வல்லார் முன்நின்(று)
யாவர்வாய் திறக்க வல்லார் ?

[கூசின — அஞ்சின. வாசகம் வல்லார் — வாசாலகர்.]

அந்தப் பேச்சைக் கேட்டதும், "என்ன வசீகர இனிமை! என்ன வாக்குப் பிரவாகம்!" என்றுதான் வெட்கப்பட்டுக் குயில்கள் பேசா மடந்தை ஆகிவிடுகின்றனவாம், இந்தப் பேசும் மடந்தைகளுக்கு முன்பு.

வாசகம் வல்லார் முன்நின்(று)
யாவர்வாய் திறக்க வல்லார் ?

என்ற செய்யுள்—அடி, வாக்கு வசீகரத்தைத்தான் எவ்வளவு வசீகரமாக வெளியிடுகிறது !

வசீகரமான செய்யுள்-அடிகளை இந்தப் பகுதியில் பார்த்தபோதிலும், இந்த மலைவளப் பாடல்களும், சோலைவளப் பாடல்களும், கம்பன் கவிதைவளத்திற்கு அத்தனை நல்ல சாட்சிகள் என்று சொல்ல முடியாது. இத்தகைய பாடல்கள் எல்லாம் கம்பன் பாடல்களே அல்ல என்று ஒரு ரஸி கர் அப்படியே ஒதுக்கிப் படலம் படலமாகத் தள்ளி விட்டார். இவை இள மைப் பருவத்திலே கவிஞனால் பாடப் பெற்றவையாக இருக்கக்கூடும். பிறகு பாலகாண்டத்திலுள்ள செய்யுள்களின் தொகையை அதிகப்படுத்தி மற்றக் காண்டங்களுடன் 'ஸமாங்க'ப் படுத்துவதற்காக இங்கே சேர்க்கப் பட்டிருக்கலாம்.

பி. ஸ்ரீ.

37.

79. பூக்கொய்யும் காட்சிகள்

பூக்களைப் பெண்கள் கூந்தலில் சூடிக் கொள்வதும், தினுசு தினு
சான மாலை கட்டி அணிந்து கொள்வதும் அழகு என்று சாதாரணமாக
நினைக்கிறார்கள். அழகிகள் பூக்கொய்வதும் அழகுதான், ரஸிகனுக்கும்
ஸௌந்தர்யக் கலைஞனுக்கும். சோணை ஆற்றங்கரைச் சோலையில் தசரத
னது படையோடு சென்ற பெண்கள் பூப்பறிக்கும் அழகை வர்ணிக்கிறான்
கம்பன்.

நீண்டு வளர்ந்த பூங்கிளைகளைத் தங்கள் மலர்க் கைகளால் சில பெண்
மணிகள் பிடித்துத் தாழ்த்துகிறார்கள். இப்போது அவை பூச்சொரிந்த
வண்ணம் அவர்களை நோக்கித் தாழ்ந்திருப்பதே ஓர் அழகுக் காட்சியாகக்
காண்கிறது. ஏன்? ஒரு காதல் - காட்சியாகவும் தோன்றுகிறதே:

நஞ்சினும் கொடிய நாட்டம்
  அமுதினும் நயந்து நோக்கிச்
செஞ்செவே கமலக் கையால்
  நீண்டலும், நீண்ட கொம்பர்
தம்சிலம்(பு) அடியில் மென்பூச்
  சொரிந்(து).உடன் தாழ்ந்த என்றால்,
வஞ்சிபோல் மருங்கு லார்மாட்டு
  யாவரே வணங்க லாதார்?

212 | 195

[நஞ்சினும் — நஞ்சைக் காட்டிலும். நாட்டம்—பார்வை; (இங்கே)
கண்கள். நயந்து — விரும்பி. செஞ்செவே—செவ்வையாக. கமலம்—
தாமரை. கொம்பர் — கொம்பு. சிலம்பு அடி—சிலம்பு அணிந்த அடி
யின். வஞ்சி — ஒரு வகைக் கொடி. மருங்குலார்—இடையை உடைய
வர்கள். மாட்டு — இடத்து. வணங்கலாதார் — வணங்காமல் நிற்பவர்.]

'எந்தப் பூக்கொம்பில் நிறையப் பூக்கள் இருக்கின்றன?' என்று
பார்த்த அந்தப் பார்வையைத்தான்:

நஞ்சினும் கொடிய நாட்டம்
  அமுதினும் நயந்து நோக்கி

என்று வர்ணிக்கிறான். அந்தக் கண்களைக் காதலர்களுடைய கண்களைக்
கொண்டே பார்க்கிறான் கவிஞன் என்று தோன்றுகிறது. என்ன நெஞ்சுத்
துணிவு!

ஆனால், "மலையாள மாதர்களை நான் காதலிக்கிறேன்!" என்று
ஒரு சமயம் மகாத்மா காந்தி சொன்னாரே, அதுபோலத்தான் இந்த மாதர்
களை இம் மகாகவி காதலிப்பதும்!

நர்தக் கண்களை மட்டுமா? அவர்களுடைய அந்தச் செயல் முழுவதை யும் அப்படியே காதலிக்கிறான், அனுபவிக்கிறான். அவர்கள் தங்கள் செந் தாமரை மலர் போன்ற கையினால் செவ்வையாகத் தீண்டியதும், 'என்ன பாக்கியம் பெற்றோம்!' என்ற அந்த நீண்ட பூங்கிளைகள் சரணாகதி செய் கின்றனவாம், அவர்களுடைய கால்களை நோக்கி. அந்தச் சிலம்பு பூண்ட மலரடிகளில் மலர்களைச் சொரிந்து வணங்குவது போல் அதோ பூங்கிளை தாழ்கிறது, பாருங்கள்! — என்று கவிஞன் காட்டுகிறான். காட்டவே நாமும் அனுபவிக்கிறோம் அந்தக் காட்சியை.

"பூங்கொம்புகளே இப்படி வசீகரிக்கப்பட்டுத் தாழ்ந்து பாதங்களில் பூச் சொரிந்து வணங்குகின்றன என்றால், அவர்களுக்கு வசியப்பட்டு வணங் காத ஆடவர்களும் உண்டோ?" என்று முடிகிறது பாட்டு:

வஞ்சிமேல் மருங்கு லார்மாட்டு
யாவரே வணங்க லாதார்?

இந்தச் செய்யுளடி, அபலைகளான பெண்களின் அபார சக்தியை வெளியிடுவதோடு, சிருஷ்டி - தத்வத்தின் அடிப்படையான ஒரு பேருண் மையையும் சுட்டிக் காட்டுகிறது. இந்த உண்மையையும் சக்தியையும் நல்ல, சிறந்த, முறையில் பயன் படுத்திக் கொள்வதானால், பெண்குலமே மனுஷ்ய குலத்தைத் திருத்தி எவ்வளவு தூரம், எவ்வளவு எளிதாக முன் னேற்ற நெறியில் செலுத்த முடியும்?

• • •



பெண்கள் பூங்கிளைகளி லும் செடி கொடிகளிலும் பூக் கொய்ய ஆரம்பித்து விட்டார் கள். பூக்களிலுள்ள வண்டு கள் கலைந்து பறந்து இவர்க ளுடைய முகங்களிலும், கண் களிலும் கூட வந்து விழுகின் றனவாம். ஓட்டினாலும் போவ தில்லை. அந்த வண்டுகள் இவர்களுடைய முகத்தையும் கண்களையும் மலர்கள் என்றே மயங்கி யிருக்க வேண்டும்! — என்கிறான் கவிஞன். நதியி லும் குளத்திலும் பூவாத புது மையான தாமரையும் நீலமல ரும் என்றும் குறிப்பிடுகிறான் இந்த மலர்ந்த முகங்களையும், கருநீலக் கண்களையும்:

நதியினும் குளத்தும் பூவா
நளினங்கள் குவளையோடு
மதிநுதல் வல்லி பூப்ப,
நோக்கிய மழலைத் தும்பி,

அதிசயம் எய்திப் புக்கு
விழ்ந்தன, அலைக்கப்
போகா:
புதியன கண்ட போழ்து
விடுவரோ புதுமை
பார்ப்பார்?

[களினம் — தாமரை. குவளை — நீலோற்பல மலர். மதிநுதல்வல்லி — பிறைச்சந்திரன் போன்ற நெற்றியை உடைய கொடி. பூப்ப — பூத்து நிற்க. மழலைத் தும்பி- இனிய ஓசையை உடைய வண்டுகள். புக்கு—புகுந்து.]



நதியிலும் குளத்திலும் பூஞ்சோலைகளிலும் பூவாத புதுமை மட்டுமா? ஒரு கொடியில் இரு ஜாதிப் பூக்கள் பூத்திருக்கக் கண்டால் இன்னும் புதுமை தானே? இந்த 'மதிநுதல் வல்லி' என்ற பூங்கொடியில் தாமரையும், அத் தாமரையில் நீல மலரும் ஒருங்கே பூத்திருந்த புதுமையைக் கண்ட வண்டு அதிசயித்து வந்துதான் அப்படி விழுகிறது! — என்கிறான். 'அலைக்கப் போகா!' —அசைத்து வெருட்ட முயன்றாலும் போகமாட்டேன் என்கிறது—என்று சொல்வது எவ்வளவு ரஸமாய் இருக்கிறது!

இந்தக் கருத்தை,

முண்டகத்தின் மீது
முழுநீலம் பூத்திருக்கக்
கண்டதுண்டு,
கேட்டதில்லை காண்!

[முண்டகம் — தாமரை.]

என்ற 'புதிர்' போடும் புதுமையிலும் காண்கிறோம். இந்தப் புதுமையை அதிசயமாகச் சொல்லிவிட்டு,

புதியன கண்ட போழ்து
விடுவரோ புதுமை பார்ப்பார்?

என்று முடிக்கிறான். புதுப் புதுப் புதுமைகளை நாடும் மனித சுபாவத்தைத்தான் கவிஞன் எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இப்புதுமை - மோகத்தைப் பயன் படுத்திக் கொள்வது தானே விஞ்ஞான வளர்ச்சிக்கும், புதுப் புதுக் கலைகளைக் கண்டு பிடிப்பதற்கும் சரியான வழி?

வேறொரு காட்சி. ஒரு புருஷன் சோலையின் ஒரு பக்கத்தில் பூப் பறித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குத் தெரியாமலே அவள் பளிச் சென்று வந்து கண்ணைப் பொத்துகிறாள். ஆம், கட்டழகியான அவள் அவன் மனைவி. அவளுக்காகத்தான் அவன் பூப்பறிக்கிறான் என்றும் ஊகிக்கலாம். 'இனி என்ன நடக்கிறது ?' என்று பார்ப்போம் :

போரென்ன வீங்கும் பொருப்பன்ன
பொலங்கொள் திண்தோள்
மாரன் அனையான் மலர்கொய்திருந்
தானை, வந்(து)ஓர்
காரன்ன கூந்தல் குயிலன்னவள்
கண்பு தைப்ப,
'ஆர் ?' என்ன லோடும், அனலென்ன
அயிர்த்(து) உயிர்த்தாள்.

[பொருப்பு — மலை. அன்ன — ஒத்த. பொலங்கொள் — அழகு வாய்ந்த. திண்தோள் — வலிய தோள்கள். மாரன் — மன்மதன். அனையான் — ஒத்தவன். கார் அன்ன—மேகத்தை ஒத்த. புதைப்ப—பொத்த. அயிர்த்து — சந்தேகித்து. உயிர்த்தாள் — பெருமூச்செறிந்தாள்.]

பூப் பறித்துக் கொண்டிருக்கிறானே, அவன் அந்த அழகிக்கு இசைந்த வீரன்தான், அழகன்தான். போர் என்று சொல்லக் கேட்டதும் ஆசையால் பொங்கிப் பூரித்துப் போகுமாம் அந்த வீரத் தோள்கள். அந்த வீரஸௌந்தரியம் அவள் உள்ளத்தைப் பறித்துக்கொள்ள அவனை மணம் செய்து கொண்டவள் தான்.

அவனும் அவள்மீது அவ்வளவு காதல் கொண்டவன் தான். இப்போது அவள் சத்தம் காட்டாமல் கூந்தல் குலைய வந்து கண்ணைப் பொத்தியதும், அவன் அசதியாக 'யார்?' என்று கேட்டு விடுகிறான். அவ்வளவு தான்; உடனே அவளுக்குச் சந்தேகம், கோபம், தாபம் எல்லாம் வந்துவிடுகின்றன.

ஏன்? "நம்மைப்போல் இவரிடம் இப்படி விளையாடும் வேறு பெண்ணும் உண்டோ? இல்லையானால் இப்படிக் கேட்பானேன் ?" என்று எண்ணுவதெல்லாம் எண்ணுகிறாள். பாட்டை மறுபடியும் பாடிப் பாருங்கள். கடைசி அடியை மீண்டும் மீண்டும் பாடிப் பாருங்கள்.

'ஆர் ?' என்ன லோடும், அனலென்ன
அயிர்த்(து) உயிர்த்தாள் !

— என்ன சப்த சித்திரம்!

துருத்தியால் ஊதப்பட்டுக் கொல்லன் உலையிலிருந்து புறப்படும் நெருப்புக் காற்றுப் போல அவள் பெரு மூச்செறிவதை அவன் இப்போது உணர்கிறான் என்றே ஊகிக்கலாம்.

கண்ணைப் பொத்திக்கொண்டு அவன் முகத்திற்கருகே தன் முகத்தை வைத்துக்கொண்ட வண்ணமே அப்படிப் பெருமூச்சு விடுகிறாள். அந்தப் பெருமூச்சையும், கோபத்தால் உலை நெருப்புப் போலச் சிவந்திருக்கும் அந்த முகத்தையும், அந்த மேகம் போன்ற கூந்தலையும், இப்போது அசடு வழியும் அவனுடைய முகத்தையுங்கூட இந்தச் செய்யுளடி அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. ஒரே செய்யுளில் ஒரு குட்டிக் கதையா ?

இத்தகைய பெண்கள் பலதார விவாகத்தை எப்படிச் சகிப்பார்கள் ? "கற்பு என்பது பெண்களுக்குத்தான்" என்ற கருத்தைத்தான் சகிப்பார்களா ?...சரி, பூக் கொய்யும் காட்சிகளுக்கிடையே இவ்வளவு போதனையா ?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

80. பூக் கொய்வதையும் மறந்தார்கள்!

இருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பெண்கள் அல்ல, இரண்டு ஆண் பிள்ளைகளும் இல்லை, காதலனும் காதலியும்தான். அவள் மகாலட்சுமி போல் இருக்கிறாள். 'பேச்சு யாழிசையோ, வீணா கானமோ?' என்னும்படி இருக்கிறது காதலனுக்கு. ஒப்பற்ற அந்த அழகு-ராணிக்கு இசைந்த ஒப்பற்ற வீரமன்னன் அவன். அவர்களுக்கிடையே காதல் இவ்வளவுதான் என்று ஒருவராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. எனினும் அவர்களுக்குள் சண்டைகளும் ஏற்படுவதுண்டு.

இப்போது நடைபெறும் இந்தச் சண்டையைப் பார்ப்போம்,

யாழொக் கும்சொல்—பொன்னனை
　　யாள்,ஓர் இகல்மன்னன்
தாழத் தாழாள்; தாழ்ந்த
　　மனத்தாள் தளர்கின்றாள்;
ஆழத் துள்ளும் கள்ளம்
　　நினைப்பாள்; அவன்நின்ற
சூழற் கேதன் கிள்ளையை
　　ஏவித் தொடர்வாளும்.

[பொன் – (இங்கே) லட்சுமி. இகல்—வலிமை. தாழாள்—தாழாதவளாகியிருந்து. சூழல்—இடம். கிள்ளை—கிளி.]

என்ற செய்யுளிலே.

காதலன் வழக்கம் போல் இந்தச் சண்டையிலும் தோல்வியடைந்து காதலிக்குத் தாழ்ந்து விடுகிறான். அவளோ அவன் தாழ்ந்தாலும் தான் தாழ்ந்து போவதாக இல்லை. சிறிதும் கோபம் தணியவில்லை, மனம் இளகவும் இல்லை. காதலன் வருத்தத்துடன் அவ்விடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் போகிறான்.

அவன் பிரிந்து போன பின்பு அவள் மனம் இளகுகிறது, கோபம் தணிகிறது. பச்சாதாபப் படுகிறாள். எப்படியாவது சமாதானமாய்ப் போக வேண்டுமென்று நினைக்கிறாள். எனினும் தானே நாடி வலியப் போகவும் இஷ்டப்படவில்லை. அது தலைவியாகிய தன்னுடைய தலைமைக்கு எப்படிப் பொருந்தும்?

எனவே "ஆழத்துள்ளும் கள்ளம் நினைப்பாள்!"—ஆழ்ந்து ஆலோசனை செய்து கள்ளத்தனமாகத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று துணிகிறாள். அந்தக் கள்ளம்தான் என்ன? தான் அன்

போடு வளர்த்து வந்த கிளிப்பிள்ளையைத் தன் காதலன் தங்கியிருந்த இட
திற்கு முன்கூட்டி அனுப்பிவிடுகிறாள், பிறகு அதைத் தேடிப் போகிறவ
போலத் தானும் போகிறாளாம்.

'அப்படிப் போய்க் கொண்டிருந்தால், அவனே தன்னிடம் மீண்
வலிய வந்து மன்றாடுவான் என்று எண்ணம். அந்தக் கருத்தை முகக் கு
முதலியவற்றாலும் வெளிப்படாமல் மறைக்க வேண்டித் தன் கள்
நினைப்பை உள்ளத்தின் ஆழத்திலே பத்திரமாக வைத்துக் கொள்கிறாள்

இத்தகைய 'சாகஸக்காரி' கணவனை அடைந்தபின் என்ன நி
கிறது? அதை நமது ஊகத்திற்கே விட்டு விடுகிறான் கவிஞன். அந்த அ
சந்தர்ப்பத்தைக் காதலன் பயன் படுத்திக் கொள்ள, அவர்களிடை
மீண்டும் சமாதானம் நிலவுகிறது, இருவரும் சேர்ந்து மறுபடியும் பூக் கொ
வப் போகிறார்கள் — என்று ஊகம் செய்துகொள்வது தவறாகாது.

இத்தகைய விளையாட்டுச் சண்டைகள் அல்லது ஊடல்களால் அ
களுடைய காதல் மேலும் மேலும் அதிகமாக வளர்கிறது என்றும் ஊகி
கலாம்.

• • • •

பூஞ்சோலையின் ஒருபக்கம் பூக் கொய்வதை விட்டுப் பெண்கள
புருஷர்களும் உல்லாஸமாக உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். பெண்க
கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறார்களாம் ஆடவர்களுடன். உண்மையி
பெண்களே உரையாடுகிறார்கள் என்று கூடச் சொல்லிவிடலாம். இவர்க
பேச்சுக் கலையையும், ஆடவர்கள் பேசாக் கலையையும் பயில்கின்றார்களோ
— என்று கூடச் சந்தேகிக்கலாம். அந்தப் 'பேசாக் கலைஞர்கள்' இந்
பேச்சுக் கலைஞர்களுடைய வார்த்தைகளை மௌனமாக ஆராய்ந்து அ
வித்துக் கொண்டிருக்கிறார்களாம். எப்படி?

செய்யில் கொள்ளும் தெள்ளமு
    தச்செந் சிலைபொன்று
கையில் பெய்யும் காமனும்
    நாணும் கவினர்.தம்
மையல் - பேதை மாதர்
    மிழற்றும் மழலைச்சொல்,
தெய்வப் பாடல் — சொற்கலை
    என்னத் தெரிவாரும்

[செய் — வயல். தெள் அமுதச் செஞ்சிலை — தெளிந்த அமிர்த
தோடு கூடிய செந்நிறமுள்ள வில்; அதாவது கரும்பு. காமன்—மன்மத
கவினர்—அழகை உடைய ஆடவர்கள். மையல்—காதல்-மயக்கம். பே
மாதர்—பேதைமைக் குணமுடைய மாதர். மிழற்றும் — மெல்லக் கூற
தெய்வப் பாடல்—கவிதா லன்னதத்தால் வரும் பாடல்கள். சொற்கலை
சொல் அமையும் கலை.]

என்று அந்தக் காதலர்களை அவர்களுடைய காதலிகளோடு காட்டுகிற
கவிஞன்.

அந்தக் காதலிகள் குழந்தைகள் போல் கொஞ்சிப் பேசுவதால் அந்
சொற்களை மழலைச் சொற்கள் என்கிறான். அப்பேச்சு அறிவுமயமா
வாவது தர்க்கரீதியாகவாவது அமையவில்லை—என்பதைச் சொல்ல வே
டியதில்லை. அதில் விஷய கௌரவத்திற்கு மாறாகப் பேதைமைக் குண
வெளிப்படுகிறது என்பது,

மையல்- பேதை மாதர்

என்ற சொற்றொடரில் குறிப்பாகக் காண்கிறது.

இப்படி அறிவும் பொருளும் உச்சரிப்பும் கூட பிசகாத மென்சொற்களாய் வெளிப்படும் இந்த மழலைச் சொற்களை அந்தக் காதலர்கள் எப்படி ரஸித்து அனுபவிக்கிறார்கள்! ஆஹா, கவியின்பத்தை ரஸிகர்கள் அனுபவிப்பது போல் அனுபவிக்கிறார்கள்!

ரஸிகர்கள் கவிதையை எப்படி அனுபவிக்கிறார்கள், தெரியுமா? கவிதை வெறி அல்லது கவிதா வன்னதம் கொண்டு உத்தமக் கவிஞன் பாடும் பாட்டைத் 'தெய்வப் பாடல்' என்றே போற்றுகிறார்கள் ரஸிகர்கள். உத்தமக் கவிஞன் ஒரு மந்திரவாதி. மனோபாவம் என்ற மாத்திரக் கோலை அவன் உயர்த்தியதும் சரியான சொற்கள் சரியான இடங்களிலே வந்து விழுகின்றன. சொற்களில் இல்லாத இன்பம் சொற்களின் விசேஷமான அமைப்பிலே பொங்குகிறது. கவிஞர்களின் இந்தச் சொல் அமைப்பைத் 'தெய்வப் பாடல்'களின் 'சொற்கலை' என்கிறார்கள்.

40

198



இந்தச் சொற்கலையை ரஸிகர்கள் எத்தனை விதமாக ஆராய்ந்து அனுபவிக்கிறார்கள்! "இந்தச் சொல் எதுகையில் (பிராஸத்தில்) அமைந்திருப்பது எவ்வளவு அழகாய், குறித்த பொருளை அழுத்திச் சொல்லுகிறது!" என்று ரஸிக்கிறார்கள். "இந்தச் சொல் மோனையில் இருந்து — அடடா! — எவ்வளவு பொருத்தமாய்ப் பேசுகிறது!" என்று பாராட்டுகிறார்கள். "இந்தச் சொற்றொடரிலுள்ள ஓசையின்பம், குறித்த விஷயத்தை எவ்வளவு திவ்யமாக நம் மனக் கண் முன் கொண்டு வந்து விடுகிறது!

மையல்- பேதை மாதர்
மிழற்றும் மழலைச்சொல்

என்ற ஓசைச் சித்திரத்தில் அந்த மழலைச் சொல்லை அப்படியே கேட்கிறோமே!" என்று வியக்கிறார்கள்.

"தெய்வப் பாடல்- சொற்கலை
என்னத் தெரிவாரும்

என்ற இந்த வாக்கியத்திலும், பொதுவாக இந்தச் செய்யுளிலும் அமைந்திருக்கும் மெல்லோசை வல்லோசைகள் நம் உள்ளத்தை எப்படி வசீகரிக்கின்றன!" என்று அதிசயிக்கிறார்கள். இப்படியெல்லாம் தெய்வப் பாடல்களில் அமைந்திருக்கும் சொற்கலையைத் தெரிந்து தெரிந்து இன்பம் அடைகிறார்களாம்.

இந்த ரஸிகர்களைப் போலக் காதலர்களும் தங்கள் காதலிகளின் மழலைச் சொற்களைத் தாங்கள் அவர்களிடம் கொண்ட காதலின் மிகுதியால் ரஸித்து ரஸித்து ஆனந்தம் அடைகிறார்கள்.

"ஆஹா, இந்தச் சொல் நிரம்பாத மென் சொல்லாக (மழலைச் சொல்லாக) இருப்பதே எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று மகிழ்ந்து போகிறார்கள். "இந்தச் சொற்களின் ஓசையின்பம் தேவகானம்போல் இனிமை தருகிறதல்லவா?" என்று அந்த இனிமையில் மூழ்கிப் போகிறார்கள். "இன்ன வார்த்தையை அவள் இன்ன விதமாக உச்சரித்தாளே! அந்த வார்த்தையை அப்படி அழுத்திச் சொல்ல வில்லையா? அதுவே அவளுக்கு என் மேலுள்ள பெரும் காதலை வெளியிடுகிறது! மேலும் அந்தக் கொஞ்சும் குரல்?" என்றெல்லாம் காதலன் எண்ணி எண்ணிக் கரைகாணாத களிப்பிலே மூழ்கிப் போகிறான்.

* * * *

இந்தப் பாட்டைக் கூடச் செருகு கவி என்று ஒரு ரஸிகர் ஒதுக்குகிறார். "பெண்கள் பேச்சில் உள்ள ரஸம், அதனால் ஏற்படக் கூடிய மயக்கம், செய்யுளின் உருவத்தில் வெளியாகவில்லை" என்கிறார். ஆனால் இது கம்பன் பாடல்தான் என்பதில் சந்தேகமே கிடையாது. "பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும், — பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?" என்று கம்பன் ஏற்கெனவே அவையடக்கமாகச் சொன்ன செய்யுள் - அடிகளை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். அங்கே 'பேதையர்' என்பது "மையல் பேதை மாதர்" தான். காதலிகள் சொல்லும் காதற் சொற்களைக் காதலர் அனுபவிப்பது போல், உண்மைக் கவிதையையும் ரஸிகர்கள் ரஸித்து ரஸித்து அனுபவிப்பார்கள் என்பது குறிப்பு.